# வடக்கு, கிழக்கில் இன்று நள்ளிரவுவரை புய[illegible]


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-50 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 8-00 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 15-00 |

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 291
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
(ஆள்மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| மூன்று மாதம் | ரூ. 18-00 | 4-00 |
| ஆறு மாதம் | ரூ. 34-00 | 7-50 |
| ஒரு வருடம் | ரூ. 66 00 | 14-00 |

யாழ்ப்பாணம் கார்த்திகை 15 றமழான் 30 திங்கட்கிழமை (30-11-70)


# அபாயம்!

(மு. சின்னத்துரை)

கொழும்பு, திங்கள்

வடக்கு கிழக்கில் இன்று நள்ளிரவுவரை புயல் அபாயமிருக்குமென வழிமண்டல அவதானநிலையம் அறிவித்துள்ளது.

நள்ளிரவுவரைபாதகமான கால நிலை இருப்பதாகவும், மழையுடனுன புயல் ஏற்படலாமென்றும் அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

திருகோணமலைக்கு கிழக்கே250மைல்தூரத்தில் காற்று அமுக்கம் இருக்கும் காரணத்தால் கடல்கொந்தளிப்பும், புயல் அபாயமும் இன்று நள்ளிரவு வரை இருக்குமென அவதான நிலையம்தெரிவிக்கிறது.

இருபத்தைந்து மைல் வேகத்தில் புயல் வீசலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ், மாவட்டத்தில் வெள்ளம்

# தாழ்ந்த பிரதேச மக்கள் வீடுகளை இழந்து தவிப்பு

## நிவாரண உதவி அளிக்க நியமன எம்.பி.கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த அடைமழை காரணமாகத் தாழ்ந்த பகுதிகளெல்லாம் நீரில் மூழ்கி ஒரே வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.**

நல்லூர் அரசடி கொட்டடி, ஆரியகுளம், முலவை, தாராக்குண்டு, பண்டாரக்குளம், நாயன்மார்கட்டு, கரையூர் ஆகிய தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் பலர் குடிபெயர்ந்து பாட

பட்டுவருவதாகத் தெரிய வருகிறது

சாவகச்சேரி. கொடிகாமம், வரணி, சச்சாய் ஆகிய பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இப் பகுதிகளிலுள்ள பல குளங்க

ஏற்படும் என்ற அச்சத்தி[ன்] காரணமாகப் பலர் முன்னெச்சரிக்கையாக வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்

### புதிய வாடகைகட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ்ப்பாணம் வாடகைக் கட்டுப்பாட்டுசபைக்குப்புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு பின்இச்சபை இயங்காமலிருந்தது. வீடமைப்பு அமைச்சசு நேற்றுமுன்தினம் புதிய வாடகைக் கட்டுப்பாட்டு சபையை ஜனாப் எஸ் ஏச் எம் சஹீட் தலைமையில் நியமித்துள்ளது.

## 'உயரிய சமயங்களின் பிறப்பிடம் ஆசியா'

— பாப்பரசர்

மணிலா, நவ. 29

'ஆசியாவின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க உலகநாடுகள் உதவிகள் கிடைக்கும் வகையில் செயலாற்றவேண்டும்'

இவ்வாறு பாப்பரசர் ஆறுவது சின்னப்[பர்] மணிலா தேசிய ஒலிபர[ப்பு] நிலையத்தில் அளித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

ஆசியா உலகத்திலேயே பெரிய நாகரிகமுடையதென்றும் உலகத்தின் உயரிய சம[illegible]

[illegible]வில் செல்வநிலை, ஏற்றத்தாழ்வாகஇருப்பதுபற்றி பாப்பரசர் வருத்தம் தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி பாப்பரசரை கொல்லும் முயற்சி நடந்ததைக் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள பாரிசுக்குச் சென்றசமயம் திரு. கரு[illegible]

## 'அரசமொழி, ஆங்கிலம் தெரியாவிட்டால் மட்டும் தமிழ்மொழி பெயர்ப்பு'

### ஆட்சிமன்றத்தில் பீலிக்ஸ்

கொழும்பு, திங்கள்

உத்தியோக மொழியோ, அன்றி ஆங்கிலமோ தெரியாத பட்சத்தில்தான் தமிழ் மொழிபெயர்ப்பு அனுப்பிவைக்கப்படுமென்று உள்ளூராட்சிபொதுநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

காலதாமதத்தைப் போக்கவே இந்நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

தமது அமைச்சின் மான்யம் மீதான விவாதத்துக்கு அமைச்சர் பீலிக்ஸ்பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அரசாங்க ஊழியர்கள் உயர்பதவிகள் பெறச்சந்தர்ப்பம் வழங்கப்படுமென்றும் அவர் உறுதி தெரிவித்தார்.

## மகாஜன சம்பத

### சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங்கள்

நேற்று இழுக்கப்பட்ட மஹாஜன சம்பத சுவீப் சிட்டிழுப்பு முடிவுகள்வருமாறு:

**முதல் மூன்று பரிசுகள்**

16 J 000130 ரூ. 60,750
23 A 000803 ரூ. 60,750
03 A 000726 ரூ. 60,750

தலா ரூ. 303-75 சதம் ஆறுதல்பரிசுபெறும்200 டிக்[illegible]

1-வது 'டெஸ்ட்'

## இங்கிலாந்து

365—6

## பண்ணைப்பாலத்தால்[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம், நாயன்மார்கட்டு, கரையூர் ஆகிய தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் பலர் குடிபெயர்ந்து பாடசாலைகளிலும் வசதியான வீடுகளிலும் கோவில்களிலும் குடியமர்ந்துள்ளார்கள்

இப்பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட நியமன எம் பி திரு. எம் சி சுப்பிரமணியம், உதவி அரசாங்க அதிபரையும் சமூக சேவைப் பகுதி அதிபரையும் சந்தித்து உடனடியாக நிவாரண உதவிகள் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

உணவு மற்றும் பாதுகாப்பான உதவிகளை வழங்குவதற்கு உதவி அரசாங்க அதிபர், சமூக சேவைப் பகுதி உத்தியோகத்தர்கள் உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனராம்.

அரசவெளி, திட்டி, வெள்ளவாய்க்கால், பண்டாரகுளம், ஆகிய இடங்களில் பலர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேயர் திரு. ரி எஸ் துரைராஜா, உதவி மேயர் திரு. ஏ துரைராஜசிங்கம் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். இப்பகுதிகளில் சுமார் 40 குடும்பங்கள் குடிபெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளன

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டாவது கொத்து அரிசியையும் இலவசமாக கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்

மம், வரணி, சச்சாய் ஆகிய பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள பல குளங்களும் கிணறுகளும் நிரம்பிவிட்டன. முருங்கை வாழை மற்றும் பல மரங்கள் வேருடன் சாய்ந்துவிட்டன

கைதடி வயோதிபர் விடுதி முன்பக்கம் முழுவதும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளது. கைதடியில் ஆயுர்வேத வைத்தியசாலை, கல்லூரி வளவிற்குள் நான்கு புறமும் வெள்ளம் தேங்கிநிற்கிறது. செம்மணி மயானம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அங்குள்ள கட்டிடம் மட்டுமே காணப்படுகிறது,

கடந்த பல தினங்களாகத் தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்த போதிலும் யாழ்ப்பாணம் நவீன மார்க்கெட் வேலை தடைப்படாமல் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. நேற்றுக் காலை மழை பெய்துகொண்டிருந்த போது தொழிலாளர்கள் அங்கு வேலைசெய்துகொண்டிருந்தனர்

அரியாலைப் பகுதியிலுள்ள குளங்கள் நிரம்பியுள்ளதால் அருகே உள்ள பல குடும்பங்கள் குடிபெயர்ந்துள்ளன, சில பாடசாலைகளில் பரீட்சைகள் நடைபெறும் காரணமாக அகதிகள் தங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

நல்லூர், கல்வியங்காடு, அத்தியடி, நகரின் மற்றும் பல இடங்களில் பலர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர், பெரும் வெள்ளம் இடங்களுக்குச் சென்றுள்ளனர்

துள்ளது.

# பண்ணைப்பாலத்தால் பிரயாணிகள் அச்சம்

யாழ்ப்பாணம், ஞாயிறு கடந்த பல தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினால் கோருவளை, வசாவிளான், திடப்புலம், குட்டியப்புலம் பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அளவெட்டி வடக்கில் நூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறியுள்ளனர்

விவசாய நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆடு, மாடு, கோழிகள் வெள்ளத்தோடு அள்ளிச் செல்லப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அச்சுவேலி அரசினர் குடியிருப்புதிட்டத்திலுள்ள வீடுகளில் புகலிடம் கோரியுள்ளனர். சிலர் அச்சுவேலி குடியேற்ற பகுதி அதிகாரி அலுவலகத்தில் முகாமிட்டுளனர்.

இதே சமயம் அச்சுவேலி குடியேற்றதிட்டத்தில்உள்ள மக்கள் மழைகாரணமாக வீடுகளில் தொடர்ந்து இருக்க முடியாமலிருப்பதாக, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும், கோப்பாய் எம். பி. திரு. ஸ். கதிரவேற்பிள்ளைக்கும் குடியிருப்பு பகுதி அதிகாரிக்கும் புகார் செய்துள்ளனர்.

தற்பொழுது குடியேற்ற திட்டத்திலிருந்து 30 குடும்பங்கள் வெளியேறுவதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றனர்.

ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு படகுசேவைகள் ஸ்தம்பிக்காமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குறிகாட்டுவான் நெடுந்தீவுப் படகுசேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. பண்ணைப்பாலத்தின் மேல் கடல் வெள்ளம் பாய்கிறது. வெள்ளம் பாயும் இடத்தில் ஆங்காங்கே பலகுழிகள் குன்றுகளும் காணப்படுகின்றன. இவ்வழியால் மோட்டார் வாகனங்கள் செல்வது மிகவும் கஷ்டமாகவே இருக்கிறது.

கடல் அரிப்பினால் ஏற்பட்ட குன்றுகளை விலக்கிச் செல்வதில் வாகனசாரதிகள் மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றனர் குன்றுகளுக்கு விலக்கும்போது கடலுக்குள் பஸ் விழுந்துவிடுமோ? என அஞ்சப்படுகிறது பஸ் பிரயாணிகள் தங்களது உயிரைக்கையில் வைத்துக் கொண்டே பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றனர்.

## தீவுப்பகுதியில்

வேலணை, ஞாயிறு தீவுப்பகுதியில் பல இடங்களில் ஊர்மனைக்குள் கடல் நீர் சென்றுள்ளது மழையும் தொடர்ந்து பெய்துகொண்டிருப்பதால் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளிலுள்ள வயல்களில் கடல் நீரும் மழை நீரும் தேங்கி நிற்கிறது.

வேலணை மேற்குப் பகுதியில் தேங்கிநிற்கும் நீர் வடிந்தோடக்கூடிய வாய்க்கால் வசதி இல்லாததால் மழை நீர் தேங்கிநிற்கிறது சில வீதிகள் நீரில் அமிழ்ந்துள்ளன. இப்பகுதியில் மக்கள் பலர் வீடுகளை இழந்து தொடர்ந்துபெய்யும் மழை காரணமாக தொலைபேசி சேவை சில இடங்களில் தடைப்பட்டுள்ளது. பல இடங்களில் பஸ் சேவை தடைப்பட்டுள்ளது. சில பஸ்கள் சேவையிலீடுபட்டுக் கொண்டிருக்கும்போதேவழியில் பழுதடைந்துவிட்டன. சில பஸ்ஸிற்குள் பிரயாணிகள் குடைபிடித்தபடி பிரயாணம் செய்தனர்.

போது தெரிவித்துள்ளார். ஆசியா உலகத்திலேயே பெரிய நாரிகமுடையதென்றும் உலகத்தின் உயரிய சமயங்களின் பிறப்பிடமாக ஆசியாவே விளங்குகிறதென்றும் தெரிவித்தார் ஆசியா

உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ள பாரிசுக்குச் சென்றசமயம் திரு. கருணாநிதி பாப்பரசரைச் சந்தித்து உரையாற்றினர்.

# சோஷலிச நாடுகளுக்கு உல்லாசப் பிரயாண வசதி

## அமைச்சு நடவடிக்கை

கோட்டை, ஞாயிறு சோஷலிச நாடுகளிலும் தூரகிழக்கு நாடுகளிலும் உல்லாசப்பிரயாண ஒழுங்குகளைச் செய்யவும் உள்நாட்டிலும் உல்லாசப்பிரயாணிகளுக்குச் சகல வசதிகளைச் செய்துகொடுக்கவும் உல்லாசப்பிரயாண கப்பல் தொழில் அமைச்சர் திரு. பி பி. ஜி. கலுகல்லை புதிய திட்டமொன்றை விரைவில் கொண்டுவரவுள்ளார்.

இப்புதியதிட்டத்தின் கீழ் 1000 ஹோட்டல் அறைகள் மேலதிகமாக அமைக்கப்படவுள்ளன, இவற்றை நிர்வகிக்கும் பொறுப்பில் தனியாருக்கும் முக்கியபங்கு கொடுக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் உல்லாசப்பிரயாணிகள் இலங்கையின் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதற்கு விசேஷ வசதிகளும் செய்துகொடுக்க ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் தெரிகிறது.

நாட்டின் கலாச்சாரத்துக்கு இழுக்கான செயல்கள் உல்லாசப்பிரயாணத் தொழிலில் இடம்பெறுமல் கவனிக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

| | |
|---|---|
| 23 A 000803 ரூ. 60,750 | |
| 03 A 000726 ரூ. 60,750 | |

தலா ரூ. 303-75 சதம் ஆறுதல்பரிசுபெறும்200 டிக்கட்டுகளில் சில வருமாறு:-

| | |
|---|---|
| 06 A000605 | 10 A000265 |
| 20 A000988 | 06 A000066 |
| 10 A000440 | 11 A000540 |
| 19 a 000709 | |
| 22 B000185 | 15 B000360 |
| 17 B000615 | 23 B000092 |
| 04 B000451 | 05 B000344 |
| 07 B000317 | 08 B000878 |
| 06 B000384 | 24 B000962 |
| 06 B000251 | 07 B000665 |
| 01 B 000709 | |
| 08 C000376 | 18 C000841 |
| 14 C000171 | 04 C000207 |
| 18 C00050C | 20 C000524 |
| 14 C000599 | 18 C003495 |
| 22 D000726 | 18 D000753 |
| 17 D 000878 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும் )

(மிகுதி,நாளை வரும்)

1-வது 'டெஸ்ட்'

# இங்கிலாந்து 365—6

பிரிஸ்பன், நவ. 29 ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் '1-வது டெஸ்ட்' கிரிக்கெட் போட்டியின், 3-வது நாளான இன்று ஆட்டம் முடிவடையும் போது, இங்கிலாந்துக் கோஷ்டி 6 விக்கெட்டுகளை இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 433 ஓட்டங்களைப் பெற்றது.

நாளை ஓய்வு நாள் ஆட்டம் நடைபெறமாட்டாது.

மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கு

# அப்துல்லா, கலீல், ஆதம்லெப்பை சாட்சியங்கள் நம்பமுடியாதவை

## திருச்செல்வம் தொகுப்புரை

கொழும்பு, ஞாயிறு சதக் அப்துல்லா, கலீல், ஆதாம்லெப்பை ஆகியோரின் சாட்சியங்கள் நம்பத்தகாத சாட்சியங்களென்றும், அஸீஸ் மரைக்கார்என்பவர் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை பிரசுரித்ததர் அழகக்கோனின் ஏஜெண்டுதான் என்பதையும் மனுதார் நிருபிக்கத்தவறிவிட்டாரென்றும் மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கில் இன்று தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்திய வழக்கறிஞர் எம். திருச்செல்வம் கியூ.ஸி. கூறினர்.

யாழ்ப்பாணத்தில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கு விசாரணை இன்று கொழும்பு தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வின்சென்ட் தாமோதரம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது முதலாவது எதிர் மனுதார் திரு. அழகக்கோன் சார்பில் ஆஜரான திரு. எம், திருச்செல்வம் தொகுப்புரை நிகழ்த்தினர்.

மன்னர் ஆட்சிமன்ற உறுப்பினராக திரு.வி. ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மன்னரில் யு. என். பி. சார்பில் போட்டியிட்ட திரு. ரஹீமினல் இம்மனுதாக்கல் செய்யப்பட்டது.

திருச்செல்வம் கியூ. ஸி. தமது தொகுப்புரையில் தெரிவித்ததாவது'

கலீல் சதக் அப்துல்லா போன்ற சாட்சியங்களின் அடிப்படையற்ற முற்றிலும் செயற்கையான சாட்சியங்களை அடிப்படையாகவைத்து சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்தித் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரின் தேர்தல் முடிவு முறியடிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை இந்தச்சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாது. நமதுநாட்டு நீதிமன்றங்கள் மட்டுமல்ல உலகின்எந்தநீதிமன்றங்களும் செவிசாய்க்காது.

மனுதாருக்கு சார்பாக் சாட்சியமளித்தவர்கள் தாகல் செய்த சத்தியக்கடதாசிகளில் குறிப்பிட்ட தகவல்களுக்கும் நீதிமன்றத்தில் வாய்மூலம் தெரிவித்த தகவல்களுக்கும் இடையிலான முரண்பாடுகளையும் திரு. திருச்செல்வம் விளக்கினர். அஸீஸ் மரக்கார் என்பவர் பெயரில் 'மன்னர் முஸ்லிம்களும் தமிழரசுக்கட்சிவேட்பாளரும்' என்ற தலைப்பில் தமிழில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம்பற்றி மனுதார் குறிப்பிட்ட குற்றச்சாட்டை மறுக்கவே மேற்கண்டவாறு கூறினர்.

# 203 ஆண்டுகள் வாழ்ந்த பெண்

லண்டன், நவ.29 உலகத்திலேயே அதிக நாள்வாழ்ந்தவர்பொலிவியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணியாவார் என்று புராதன கால ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள இத்தாலிய அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பெண் 203 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். அடுத்தபடியாக சோவியத் யூனியனைச் சேர்ந்த ஒருவர் 195 ஆண்டுகளும் அவருக்குப்பின் ஈரானைச் சேர்ந்த ஒருவர் 190 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்.

# நியமனம்

கோட்டை, ஞாயிறு மலேஷியாவின் இலங்கை ஹைகமிஷனராக திரு. ஆர். எஸ். பெல்பொலநியமிக்கப்பட்டுள்ளார்.

# குளங்கள் எல்லாம் நிறைந்து விட்டன

யாழ்ப்பாணம், திங்கள் கைதடி நல்ல தண்ணீர் திட்டத்துத் தாம்போதி நீர் மட்டம் அதிகரித்து விட்டது. கோப்பாய், நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி முதலிய இடங்களில் பெரு மழை பெய்தபடியால் வெள்ளம் பெருகி விட்டது.

நாவற்குழி, தனங்கிளப்பு மறவன்புலவு, கேரதீவு போன்ற இடங்களிலும் வெள்ளம் பெருகியுள்ளது.

நெல்லு வயல்களில் அதிகம் தண்ணீர் நின்று பயிர்களுக்கு சேதம் ஏற்படாதபடி விவசாயிகள் வடிகால் வெட்டியுள்ளார்கள். தட்டுவன்கொட்டி மக்கள் ஊரை விட்டுக் குடிபெயரவேண்டியளவு வெள்ளம் பெருகியுள்ளது. கச்சாய் அல்லாரை பகுதிகளில் வாய்கால் வழியாக மழைவெள்ளத்தைக் கடலுக்குள் பாய்ச்சுவதில் வாலிபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## தேவரிக்குள வாசிகள் இடம்பெயர்ந்தனர்

யாழ்ப்பாணம் திங்கள் தொடர்ந்து பலதினங்களாகப் யாழ்ப்பாணப்பகுதியில் பெய்த மழையினால் யாழ்ப்பாணம்தேவரிக் குள நீர் வழியத் தொடங்கியுள்ளது. ஞல்அப்பகுதி வாசிகள் இல்லங்களை விடுத்து அப்புறப்படும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி பகுதியிலுள்ள திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தினர் நிவாரணவேலைகளில் சம்மந்தப்பட்டதாகவும் மாநகரசபையுடன் இதுபற்றி தொடர்பு கொண்டு நிவாரண உதவி வழங்க வேண்மென்று கேட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

செனட் ஒழிப்பு மசோதாவை

# யு.என்.பி. கட்டாயம் எதிர்க்குமாம்

கொழும்பு, ஞாயிறு "செனட் சபையை ஒழிக்கும் மசோதாவை நாங்கள் கட்டாயமாக எதிர்க்கவே செய்வோம்" என்று செனட் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஃபேர்லி விஜயமானே பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

சில எதிர்க்கட்சி செனட்டர்கள் மசோதாவை ஆதரித்து வாக்களிக்கக்கூடும் என்று நிலவும் வதந்திகள் பற்றி குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

தமது கட்சி மசோதாவை எதிர்ப்பதற்கு ஏற்கனவே முடிவு செய்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார் எனவே அதிகாரபூர்வமான கொள்கையில் எதுவிதமாற்றமும் இருக்கமுடியாது என்றார் அவர். யு. என். பி. க்கு வெளியில் இருப்பவர்களுக்காக என்னால் பேச முடியாது என்றும் அவர் சொன்னார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செனட்டர்கள் மசோதாவை ஆதரிக்கக் கூடும் என்று கருதப்படுகிறதாம். (சி. பி. ஏ.)

......

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர்சட்டநாதர்கோவிலடியிலுள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் கல்போனியா யோகஆதார நிலையத் தலைவியும், ஸ்ரீசத்யசாயிபாபாவின் அடியார்களில் ஒருவருமான திருமதி இந்திரா தேவிஇன்றுமாலை 4-30மணியளவில் 'பாபாவும் திவ்விய வாழ்க்கையும்' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

யிலர்:
தையல் வேலையில் நல்ல அனுபவமுள்ள ரெயிலர்கள் தேவை. பிற்பகல் 5-00 மணிக்கு நேரில் சந்திக்கலாம். ராஜ்மஹால், பஸ் நிலையம், அச்சுவேலி.
2537

சாரதி:
கார் ஓட்டுவதற்கு சாரதி தேவை. 5 வருட அனுபவம் விரும்பத்தக்கது. எதிர்பார்க்கும் சம்பளம், சான்றிதழ் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2540, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2540


யாழ். டவுன் கிளப்

## 'கரம்' போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்
'யாழ். டவுன் கிளப்' அங்கத்தவர்களிடையே நடாத்தப்பட்டு வரும் ''கரம்'' சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகள் அனைத்திலும் ஜே. அன்ரனிப்பிள்ளை, எஸ். ஜே. ராஜரட்ணா இரட்டையர்கள் பெரும் வெற்றியீட்டினார்கள்.

ஜே. அன்ரனிப்பிள்ளை, எஸ். ஜே. ராஜரட்ணா இரட்டையர்கள்; ஆர். ஆறுமுகம், ஏ. தேவராசா இரட்டையர்களை 2-0 ஆட்டத்தாலும்; ஆர். ஆறுமுகம், ஏ. பெனடிற் இரட்டையர்களை 2-0 ஆட்டத்தாலும், ஏ. பெனடிற். கே. செல்வலிங்கம் இரட்டையர்களை 2-1 ஆட்டத்தாலும் வெற்றி பெற்றனர்கள்.

மேற்படிப் போட்டிகளுக்கு திரு. பி. தேவநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—பத்மினி
நடித்த
தில்லானா மோகனம்பாள்



## ஏல விற்பனை

வலி—கிழக்கு
ப. நோ. கூ. ச. சமாசம்
நீர்வேலி

வருகிற வெள்ளிக்கிழமை 4-12-70 முற்பகல் 10-00 மணியளவில் மேற்படி சமாசக் கந்தோரில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இவைகளைக் கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

1. மணல் 1/2 கியூப்.
2. சல்லி 1/2 கியூப்.
3. முகட்டு ஓடு 10.
4. நீப்பை 2'' X 2''-4 அடி தொடக்கம் 6''X2''X14'
5. பனந்தடி 5' தொடக்கம் 11' வரை.
6. காட்டுத்தடி 5'-10"
7. சிமெந்து தாண் பெட்டிகள் 9''X9''X4'
8. தார் பீப்பா-45 கலன் (ஸ்பிரமக்ஸ்)
9. கதவு நிலை-1
10. யன்னல்-2.
11. கொன்கிறீற் பிளேற்
12. மற்றும் கழிவு பொருட்கள்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்,

27-11-70.
2572


## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

சாய்ந்தமருது. ஞாயிறு
மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி சமீபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு அர்ச் மிக்கல் கல்லூரி சிரேஷ்ட பிரிவுச் சாம்பியனாகவும், அதே கல்லூரி கனிஷ்ட பிரிவுச் சாம்பியனாகவும், வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் மத்திய பிரிவுச் சாம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டன.

இதன் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது மேற்படி சங்கத் தலைவரும், வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய அதிபருமான திரு. எஸ். வைத்தியநாதன் பரிசில்களை வழங்கினார்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், போயா நாட்கள் 10-30


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 30—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம் 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்பு.

இரவு 6-15 பாமாலை, 7-00 பேச்சு, 7-15 புல்லாங்குழல், 7-45 சிறுகதை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## இன்றைய பலன்

கார்த்திகை மீ 15-ந் திகதி (30-11-70)

மேஷம்- அதிகாரக் குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

ரிஷபம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்ப பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும்.

மிதுனம்- எதிர்பாராத் காரியங்களில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம்

கடகம்- அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

சிம்மம்- உல்லாசமாக பொழுதை போக்குவீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள்.

கன்னி- சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும் பிதா வழிச்சுகமும் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு.

துலாம்-எதிர்பாராதவகை [illegible]

# வாக்குகளை மீண்டும் எண்ண மறுக்கப்பட்டதின் காரணம்

## நீதியரசர் விளக்கம்

யாழ்ப்பாண தேர்தல் ஆட்சேப மனு மீது தேர்தல் நீதிபதி திரு. பண்டித குணவர்த்தன அளித்த தீர்ப்பின் ஒரு பகுதி நேற்று வெளியாகியிருந்தது. இன்று மிகுதிப் பகுதி இங்கு தரப்படுகின்றது.

தேர்தல் நீதிபதி திரு. பண்டித குணவர்த்தன தமது தீர்ப்பில் தொடர்ந்து கூறியதாவது:-

திரு. நடராஜாவின் சாட்சியத்தின் ஒட்டு மொத்தம் என்னவென்றால், அந்தச் சமயத்தில் வாக்குகள் எண்ணப்படுவதற்கும் மறுமுறை எண்ணப்படுவதற்கும் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் குறித்து அவர் புகார் எதுவும் தெரிவிக்கவில்லை. வாக்குகள் பிரித்து எண்ணப்பட்டது குறித்து அவர் திருப்தியடைந்திருந்தார் என்றே தெரிகிறது. ஆரம்பத்தில்நடந்ததுபோல் இரண்டாம் முறையும் எண்ணப்படவில்லையென்பதே அவரது குறைபாடாகத் தெரிகின்றது. எல்லா வாக்குகளையும் முன்போலவே ஒன்றாகக் கொட்டி கும்பலாகப் போட்டு மீண்டும் எண்ணுவது என்பது அர்த்தமற்ற புத்திசாலித்தனமற்ற செயலாகும்

தேர்தல் சம்பந்தமான சட்டத்தின் 48 (7) பிரிவு வாக்குகள் திரும்ப எண்ணப்படுவதற்கு வழி செய்கின்றது. தேர்தல் அதிகாரி அவசியமென்று கருதும்போது எத்தனைதடவை எண்ண வேண்டும் என்பதற்கும் வழி இருக்கின்றது வேட்பாளர்களோ அவர்களின் ஏஜண்டுகளோ மறு எண்ணுதலுக்கு விண்ணப்பம் விடுத்தால் இது நடைபெறும் இருதடவைகளுக்கு மேல் அது போகக்கூடாது. இரண்டாவது மறு எண்ணுதலுக்குக் கோரிக்கை விடும் உரிமையை வேட்பாளருக்கும் அவர் ஏஜண்டுக்கும் இந்தப் பிரிவு வழங்[illegible] தல் சம்பந்தமான [illegible] ன் இந்தப்பிரிவு பற்றி[illegible]

ரார். அலட்சியம் காட்டியது மட்டுமல், முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் அவர் சந்தோஷமாகப் புறப்பட்டுப் போய் இருக்கிறார். திரு. நடராசாவை நான் நம்புவதானால் அவரது நடத்தை ஒரு கபடதாரியின் நடத்தையே என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு மனிதனின் நண்பனாகப் பாவனை செய்துகொண்டு திரு. நடராஜா செய்ததுபோல் நண்பனின் தோல்வியில் மகிழ்ச்சியடைவது ஒரு கபடதாரியின் செயலாகவே இருக்கும்

மனுதாரின் முதல் குற்றச்சாட்டின்படி எண்ணுதல் மிக வேகமாகச் செய்யப்பட்டது என்கிறார் வாக்குகளைப் பிரித்து எண்ணுவதில் அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் குறிப்பிட்ட வேகம் ஒன்று இருக்கிறதா என்பதை இனிமேல்தான் நான் தெரிந்து கொள்ள வேண்டும்

தேர்தல் பொறுப்பதிகாரியான திரு. அமித்தின் சாட்சியங்களின் படி கவனமாகவும் நச்சிதமாகவும் இந்தப் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டிலிருந்து தேர்தல் காலங்களில் திரு. அமித் இந்தக் கடமைகளைச் செய்து இவைகளில் அனுபவம் பெற்றவர் அவரது சாட்சியத்தில் பிரித்து எண்ணியது பற்றி விபரமாகக் கூறியிருக்கிறார். அவரது சாட்சியம் என் நம்பிக்கையை வலுப்படுத்தியது

இரண்டாவது குற்றச்சாட்டு செல்லாத வாக்குகள், முதலாவது எதிர்மனுதாருக்குச் சார்பாக எண்ணப்பட்டன என்பதாகும் சட்டத்தின் 49 (5) பிரிவு, 87 பிரிவு ஆகியவற்றின்படி மனுதார் இவ்வாறு உறுதியாகக் கூறமுடியாது. [illegible]49 (5) பிரிவு வாக்குச்சீட்[illegible]ன்று [illegible]க்கப்படவேண்டுமா? [illegible]யா? என்ற தேர்தல் பொறுப்பதிகாரியின் முடிவு [illegible] தேர்தல்மனு

மிகக் குறைவான பெரும்பான்மை இருந்ததால் வாக்குகளைப் பிரிப்பதும் எண்ணுவதும் மிகக் கவனமாகச் செய்திருக்கவேண்டும். உதவித் தேர்தல் பொறுப்பதிகாரி வாக்குச் சீட்டுகளின் இணைப்புகளைப் பரிசோதிக்கவில்லை என்பதாகும்.

சாட்சியங்களின்படி இது ஆதாரமற்றது.

(எப்) குற்றச்சாட்டு: மறு எண்ணுதலின்போது கட்டுக்கட்டாகவே எண்ணப்பட்டது. கட்டுகளிலுள்ளவை பிரிக்கப்பட்டது பற்றியும், எண்ணிக்கை பற்றியும் கவனம் செலுத்தப்படவில்லை. பிரிப்பது பற்றிய சோதனைக் கட்டுகளைப் பெருவிரல்களுக்கும், ஆள்காட்டிவிரல்களுக்குமிடையில் வைத்து ஒரு தட்டுத் தட்டுவதின் மூலம் செய்யப்பட்டது என்பது,

எவ்வாறு கட்டுகள் சோதிக்கப்பட்டனஎன்பதை திரு. அமித் நீதிமன்றத்தில் செய்துகாட்டினார். சோதனை இலகுவாகவும், சரியாகவும் நடைபெறும் வகையில் கட்டுகள் கட்டப்பட்டிருந்ததாக நான் ஏற்கனவேகுறிப்பிட்டிருக்கிறேன்

(ஜி) குற்றச்சாட்டு: சந்தேகத்திற்குரிய வாக்குகள் பற்றிய முடிவெடுக்க அவைகளைத் தம்மிடமே கொடுக்க வேண்டும் என்று பொறுப்பதிகாரி கூறியிருந்தபோதிலும் அநேகமான வாக்குகளின் தகுதிபற்றி எண்ணும் குமாஸ்தாக்களே முடிவெடுத்தனர் என்பது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக எவ்வித சாட்சியமும் இல்லை.

குற்றச்சாட்டு 'எச்'

தேர்தல் முடிந்து அடுத்த நாள் காலை 7மணிக்கு எண்ணுவது முடிந்தது. மறு எண்ணுதல் நடைபெற்றபோது ஊழியர்கள் மிகவும் களைப்படைந்திருந்தனர். என்பது.

மறு எண்ணுதலுக்கான ஒரு காரணம் என்று இதை ஏற்கமுடியாது. குற்றச்சாட்

படி இந்தக்கூற்றில் விஷயமே இல்லை.

மேலே நான் விளக்க முயன்ற காரணங்களுக்காக நான் மனுதாருக்கெதிராக தீர்மானித்து மீண்டும் வாக்குகள் எண்ணப்படவேண்டும் என்பதை நிராகரிக்கின்றேன்

மனுதார் இந்தியாவில்சுகவீனமுற்றிருப்பதாகவும் அதனால் நீதிமன்றத்திற்கு வரமுடியவில்லையென்றும் கூறி வைத்திய அத்தாட்சியொன்றை மனுதாரின்வழக்குரைஞர் தாக்கல் செய்தார். இதனால் விசாரணைக்கான இன்னொரு நாள் குறிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

முதலாவது எதிர் மனுதாரின் வழக்குரைஞர் இதைக் கடுமையாக எதிர்த்தார். மனுதார் உண்மையில் நற்சுகமாக இருப்பதாகவும் தென் இந்தியாவில் உல்லாசமாகப்பொழுது போக்குவதாகவும் கூறியதோடு இந்த மருத்துவ அத்தாட்சி உண்மையற்றது என்றும் அவர் வாதித்தார். கோர்ட்டுக்கு மனுதார் வேண்டுமென்றே வராமல் இருப்பதாக சாட்சியங்களும் கொடுக்கப்பட்டன. எயர் சிலோன் ஸ்டேஷன் மனேஜர் திரு. ஃபிச் சாட்சியமளித்தார்.

மனுதார் 26-10-70ல் பலாலி விமானநிலையத்திலிருந்து அவர் திருச்சிக்குப் போவதாக கூறினர்.

போக வரும் பயணச்சீட்டு பிரதி மனுதாருக்கு சாதகமாக இருப்பதோடு பிரயாணிகள் பெயர் பட்டியலிலும் மனுதார் பெயர் இடம்பெற்றுள்ளது. இந்தப் பிரயாணச் சீட்டு ஒரு வெளிப்படையான டிக்கட்டாகும். இந்தப் போக்குவரத்து டிக்கட்டில் திரும்பும் திகதி வெளிப்படையாக விடப்பட்டுள்ளது. இப்படியான டிக்கட்டை ஒரு வருட காலத்திற்குள் இலங்கைக்குத் திரும்பி வரப் பாவிக்கலாம். மனுதாரை

வில்லை, பதிவுப் புத்தகத்தி காணப்படும் தகவல்கள்பற்றிய சாட்சியங்களை ஏற்கக் கூடிய சாட்சியம், என நான் அனுமதித்தேன்.

ஜெயசுந்தரா பொய்ச் சாட்சியென்று குறிப்பிடப்பட்டது. மனுதாரை இவர் சந்தித்துப் பேசினர் என்று கூறியிருப்பது கற்பனையா, அல்லது மனுதார் என்று கூட்டிக்கொண்ட ஒருவருடன்பேசினரா என்ற கேள்வி எழுகின்றது.

நான் ஜெயசுந்தராவின் சாட்சியத்தை மிகவும் கவனமாக அவதானித்தேன். அவர் உண்மைபேசுகிறார்என்பதில் நான் திருப்தியடைந்துள்ளேன் திரு ஜெயசுந்தராவின் சாட்சியத்தின்படி 21-11-70ல் மனுதாரரை சந்தித்தபோது அவர் மகிழ்ச்சியாக இருக்ககாணப்பட்டார். ஒருதடவை மனுதாரின் தீவிர ஆதரவாளராக இருந்த திரு தம்புவின் சாட்சியமுமிருக்கிறது. திருச்சியிலுள்ள ஹோட்டலொன்றின் பதிவுபுத்தகத்திலுள்ள மனுதாரின் கையெழுத்தை திரு. தம்பு பார்த்ததாக கூறியதோடு, அது மனுதாரின் கையெழுத்தென அடையாளம் கண்டிருக்கிறார் டாக்டர் ராஜேந்திரம் சம்பந்தமாக, திரு. ஜெயசுந்தரா அளித்த சாட்சியமும் இருக்கிறது. டாக்டர் ராஜேந்திரம்தான் மனுதார் சுகவீனமுற்றிருப்பதாகவும் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அதனால் அவர் எழுந்துநடமாடக்கூடிய நிலையிலில்லையென்றும், பூரணஓய்வு எடுக்கவேண்டுமென முன்னர் இரு வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொடுத்தவராகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இடமாற்றத்தை ரத்துச் செய்க

கிளிநொச்சி, ஞாயிறு
இங்குள்ள மரவேலைப் பயிற்சி நிலையம் கம்பளைக்கு மாற்றப்பட விருப்பதை இரத்துச் செய்யுமாறு கோரி பட்டினசபைத் தலைவர் திரு [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஸ்பை இன் ரோம்

(SPY IN ROME)- ஹிந்தி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா—அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர் — சுந்தரராஜன்
வாணிஸ்ரீ-சந்திரகாந்தா
நடித்த

# நேர்வழி

5வது வெற்றி வாரம்!

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கெப்பிட்டல் பிளாசா மைலன்
திரைகளில்

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
முத்துராமன் — வாணிஸ்ரீ
மற்றும் பலர் நடித்த

# கண்ணன் என் காதலன்


துலாம்-எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். கொடுக்கல் வாங்கல்களினுல் பிணக்குகள் ஏற்படும்.

விருட்சிகம்- சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். மகிழ்ச்சிகரமான தினம்.

தனுசு- கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. சுபதினம்.

மகரம்- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும்.

கும்பம்- வாகனவிருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும், முன்னேற்ற வழியும் தோன்றும்.

மீனம்- சிலருக்கு திடீர் திரவிய இலாபமும் கிடைக்கும். கலகலப்பான தினம் குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## புதிய பஸ் சேவை

உடுப்பிட்டி, ஞாயிறு

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர்களின் முறையீட்டைத் தொடர்ந்து பருத்தித்துறையிலிருந்து பலாலியூடாகக் கீரிமலைக்கு புதிய பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


ஸ்ரீகாலிங்கன்
இனுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த

தெய்வப் பிறவி

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 shows
Kirk Douglas
in
THE ARRANGEMENT
(Scope-color)

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya days 4 shows

Gene Barry
in
MAROC 7


தல் சம்பந்தமான சட்டத்தின் இந்தப்பிரிவு பற்றித் தாம் அறிந்திருக்கவில்லை ...று திரு. நடராஜா ...றுகிறார்.

பத்து வருடமாக புறக்டர் தொழில் பார்த்து அனுபவமுள்ளவரும் மனுதாரின் பிரதம ஏஜண்டாக இருந்தவருமான திரு. நடராஜாவின் இக்கூற்றை என்னால் நம்புவது கஷ்டமாகவிருக்கிறது. இரண்டாவது எண்ணுதலுக்குக் கோரக்கூடிய தமது உரிமையை அவர் பயன்படுத்தத் தவறிய குறையும், உதவித் தேர்தல் அதிகாரியின் முன் பயன்படுத்தியிருக்கவேண்டிய உரிமையை இ...கு பயன்படுத்த முடியாதென்பதையும் திரு. நடராஜா இப்பொழுது உணர்ந்திருக்கிறார். தமது சாட்சியத்திற்கு ஆதாரம் ஏற்படுத்திக்கொள்வதற்காகத் தேர்தல் சட்டம் பற்றி தமக்குத்தெரியவில்லையென்று அவர் பாவனை செய்கிறார் என்று நான் நம்புகிறேன். மனுதாரின் நண்பராகவும் இருந்தும், எல்லாத் தேர்தல்களிலும் அவருக்கு ஏஜண்டாக இருந்தும் இந்தத்தேர்தல் முடிவுகள் பற்றித் தாம் அலட்சியமாக இருந்தார் என்றும் அவர் அதிர்ச்சியளிக்கும் ஒரு கூற்றை கூறியிருக்கி

இல்லையா? என்ற தேர்தல் பொறுப்பதிகாரியின் முடிவு இறுதியானது தேர்தல்மனுவொன்றின் மூலம் அதனை கேள்விக் குட்படுத்த முடியாது. என்றிருக்கிறது.

87-வது பிரிவு வாக்குச் சீட்டு மறுக்கப்பட வேண்டுமா இல்லையா என்ற தேர்தல் பொறுப்பதிகாரியின் தீர்ப்பு 49-ம் பிரிவின்கீழ் தேர்தல் மனுவில் ஆட்சேபிக்க முடியாதென்கிறது இந்த அடிப்படையில் மனுதாரின் வழக்குரைஞர் வலியுறுத்தவில்லை.

(சி) முதல்தடவை எண்ணுதலின்போது இருந்த பெரும்பான்மை மறு எண்ணுதலில் வித்தியாசப் படுகிறதென்பது அடுத்த குற்றச்சாட்டு. வித்தியாசம் இரண்டுவாக்குகள்தான். முதல் எண்ணுதலில் 58 ஆக இருந்தது இரண்டாவது எண்ணுதலில் 56 ஆக பெரும்பான்மை இருந்தது.

(டி) குற்றச்சாட்டு: வினியோகிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளும், பெட்டிகளில் காணப்பட்ட வாக்குகளும் எண்ணிக்கையில் ஒத்துவரவில்லை என்பது.

பெட்டிகளில்காணப்பட்ட வாக்குகளில் ஒன்று குறைந்தது. ஆனால் விளைவுகள் ஒன்றும் இல்லை

(ஈ குற்றச்சாட்டு

மறு எண்ணுதலுக்கான ஒரு காரணம் என்று இதை ஏற்கமுடியாது. குற்றச்சாட்டுப்படி ஊழியர்கள் மிகவும் களைப்படைந்திருந்தார்களா என்றும் சாட்சியங்களில் தெரியவரவில்லை.

திரு நடராஜா மறு எண்ணுதல் காலை 5-45 மணிக்கு முடிந்ததாகக் கருதுகிறார் இது மனுதாரின் குறிப்புக்கு முரண்படுகின்றது.

குற்றச்சாட்டு 'ஐ'

மறு எண்ணுதலின்போது எண்ணும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி மனுதார் கோரினர் 4வது எதிர் மனுதாரும் ஏஜண்டுகளும் போய்விட்டதால் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. என்பது.

ஸ்திரமான மனு எண்ணுதல் நடைபெறும் என்ற நிலைமை இருந்தால் குமாஸ்தாக்களின் எண்ணிக்கையைத் தாம் குறைக்கவில்லையென்று திரு அமித் கூறியிருக்கிறார்

குற்றச் சாட்டு ஜே.

மனுதாருக்கு பெரும்பான்மையான சட்டபூர்வமான வாக்குகள் இருந்தன என்பது.

இந்த வழக்கில் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களின்

யான டிக்கட்டை ஒரு வருட காலத்திற்குள் இலங்கைக்குத் திரும்பி வரப் பாவிக்கலாம். மனுதாரை 21-11-70 திருச்சியில் சந்தித்ததாக கூறும் திரு. ஜெயசுந்தராவின் சாட்சியமுமிருக்கிறது.

திரு. ஜெயசுந்தரா, முதலாவது எதிர்மனுதாரினல் இந்த வழக்கு விசாரணைக்கு வராமல் நிற்கும் மனுதார் சுகவீனமுற்றிருக்கிறாரா என்பதை அறிய தனிப்பட்ட முறையில் துப்பறிந்துவர அனுப்பப்பட்டார். 1-வது மனுதாரரின் புறக்டர் திரு. புலி மனசிங்காவின் தகவலின்படி திரு. ஜெயசுந்தரா பாலாதம்புவுடன் சென்றார். திரு. ஜெயசுந்தரா மனுதாரரை நேரில் அறிந்திருக்கவில்லை. மனுதாரரை முன்னாள் ஆட்சிமன்றஉறுப்பினர் என பெயரளவில் மட்டுமே அறிந்திருந்தார். 21-11-70ல் மனுதாரரை திருச்சியிலுள்ள அஜந்தா ஹோட்டலில் சந்தித்ததாக திரு ஜெயசுந்தரா தெரிவித்துள்ளார். தான் ஒரு இலங்கையர் என்றும் வத்தளையில் இருப்பதாகவும் மனுதாரருக்கு கூறியுள்ளார். மனுதாரருடன் பேசிக் கொண்டிருந்தபோது கதையோடு கதையாக மனுதார்தான் கடந்த தேர்தலில் 56 வாக்குகளால் தோல்வியுற்றதாகவும் தேர்தல் ஆட்சேபமனு ஒன்று தாக்கல் செய்திருப்பதாகவும் தேர்தல் ஆட்சேபமனு டிசம்பர் 3-ம் தேதிக்குப் பின்தான் விசாரணை செய்யப்படும் என்று மனுதார் கூறியுள்ளதாக திரு. ஜெயசுந்தரா தெரிவித்துள்ளார் மறுநாள் திரு. ஜெயசுந்தரா ஹோட்டல் பதிவு புத்தகத்தை பரிசிலனை செய்ததாக தெரிவ...ோடு, அதில், வந்த தேதியும், சென்ற தேதியும், நேரமும், மற்றும் விபரங்களும் கூறப்பட்டிருக்கிறது. அந்த புத்தகத்தில் மனுதார் பற்றிய விபரங்களும், குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். அந்த பதிவு புத்தகம் இங்கு சமர்ப்பிக்கப்பட

பயிற்சி நிலையம் கம்பளைக்கு மாற்றப்படவிருப்பதை இரத்துச் செய்யுமாறு கோரி பட்டினசபைத் தலைவர் திரு ச. சு. முருகேசு தொழில் அமைச்சருக்குத் தந்திச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில் அவர் இங்குள்ள ஒரேஒரு கைத்தொழிற் பயிற்சி நிலையத்தைக் கம்பளைக்கு மாற்றுவது இப்பகுதி மக்களுக்கு விளைவிக்கும் அநீதியாகுமென்றும் இத்திட்டத்தைக் கைவிடுமாறும் கோரியுள்ளார்.

## தடையை நீக்குக

முசலி, ஞாயிறு

மன்னர் மாவட்டத்தில் பெரிய குளமாகிய கட்டுக்கரைக் குளத்திலிருந்து இசமாலைத்தாழ்வு என்னும் கிராம விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் போகும் வாய்க்காலைச் சில காலத்திற்கு முன் நீர்ப்பாசன இலாகா தடைசெய்ததன் காரணமாய் இப்பகுதி மக்கள் தங்கள் வயல்களுக்கு வேண்டிய தண்ணீரைப் பெறமுடியாமல் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்

இதையொட்டி இந்த வாய்க்காலைத் திறக்கும்வண்ணம் இசமாலைத்தாழ்வு கிராமமுன்னேற்றச் சங்கக் காரியதரிசியும், நானாட்டான் கிழக்கு கிராமசபை உபதலைவருமான திரு அ எலியாஸ்பிள்ளை முசலிக் காரியாதிகாரிக்கும், மன்னர் அரசாங்க அதிபருக்கும் முறையீடு செய்துள்ளார்.

## திரைப்படவிமர்சனம்

# நேர்வழி

குறுக்குவழி நடப்பவர்கள், நேர்வழி நடப்பவன் இவர்களுக்குள் ஏற்படும் மோதலை சித்தரிக்கிறது 'நேர்வழி'.

பணத்துக்காகவும், பகட்டான வாழ்வுக்காகவும் அண்ணன் தேவரை கொலை செய்விக்கிறார் சுந்தரராஜன்

முற்றிலும் மாறுபட்ட பாத்திரத்தில் நடித்திருக்கிறார். நாணல்படத்தில் பயங்கரவாதியாக துப்பாக்கிக் கையுடன் பார்த்த சுந்தரராஜனை இப்படத்திலும் பயங்கரவாதியாக காண்கிறோம். குறுக்குவழியில் நடப்பவர்களுக்கு என்ன முடிவு ஏற்படுமோ அந்த முடிவு தான் அவருக்குஏற்படுறது

ராணி சர்க்கஸ்நடாத்தும் வில்லன் மனோகரன் தன்சிங்கங்களைக் கொண்டே கொலைகளைச் செய்து முடிக்கிறார். அவர் வளர்த்த சிங்கம் அவருக்கே யமனாகவா வரவேண்டும்?

நேர்வழி நடப்பவனாக வரும் ஜெய்சங்கர் சண்டைக்காட்சிகளில் நன்றாக நடித்திருக்கிறார் அவருக்கு ஜோடி வாணிஸ்ரீ, நாயும், குதிரையும் அவரது உயிர் போன்றவை எத்தனை ஆபத்துக்களில் இருந்து அவரைக் காப்பாற்றுகின்றன.

மாஸ்டர் பிரபாகர் நன்றாக நடித்திருக்கிறார். எதிர்காலத்தில் வில்லனுக்கு வருவதற்கு இப்போதே 'ஸ்ரண்ட்' பண்ண ஆரம்பித்து விட்டார்,

விஜய லலிதாவின் சாகஸ நடனங்கள். வாணிஸ்ரீயின் அமைதியானநடிப்பு சௌந்தரராஜன்சுசீலாவின் பின்னணிப்பாடல்கள்படத்தின் வெற்றிக்கு காரணமாயிருக்கலாம். நாகேஷ் மனோரமா ஜோடிநன்றாக நகைச்சுவை வழங்கியுள்ளது.

ஆங்கில படங்கள் போல் (கவ்போய்) நேர்வழியை எடுத்திருக்கிறார்கள். பொழுது போக்கிற்காகப் பார்க்கக் கூடியபடம். இப்பொழுது யாழ். வின்ஸரில் ஓடிக் கொண்டிருக்கின்றது.

-சிந்தனைச் செல்வன்-

## மாணவர் சுற்றுலா

மாவிட்டபுரம், சனி

குளியாப்பிட்டியா கனிஷ்ட பல்கலைக்கழக விவசாயப்பகுதி மாணவர்கள் கல்வி சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு வடபகுதிக்கு வந்துள்ளனர். 85 மாணவர்கள் கொண்ட கோஷ்டி பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம் உட்பட பல பகுதிகளுக்கும் சென்று கல்வி விவசாய முன்னேற்றங்களை பார்வையிட்டு வருகின்றனர்.

## நத்தார் பண்டிகைக்கு ஐவுளிகள்

கோட்டை, ஞாயிறு

சீன இலங்கைக்குவிநியோகிக்க இருக்கும் 5 கோடியார் பருத்திப் புடைவைகளில் ஒரு பகுதியான 2கோடியே 30 லட்சம் யார் ஐவுளி வகைகளை நத்தார் பண்டிகையை முன்னிட்டு மிகவிரைவில் வழங்கவிருக்கிறது.

மிகுதித் தொகையை அடுத்த வருட முற்பகுதியில் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சீனஇலங்கைக்கு வழங்கும்.

## கலைவிழா

ஊர்காவற்றுறை.ஞாயிறு

கரம்பன்-புனித செபஸ்தியார் கனிஷ்டபாடசாலைக் கலைவிழா வட்டார கல்வி அதிகாரி திரு. நல்லையா தலைமையில் நடைபெற்றது இசை நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.


# 32-30-29-27-25-28-24-26-22-23

நியாயமானது எது?

(விளம்பரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடிய தலைநகர் நாம்பென் மீது கம். படைகள் 4 முனைகளில் தாக்குதல்

## மூன்றுவது முக்கிய நகரம் வீழ்ச்சியுறும் அறிகுறி

### தாய்லாந்திடம் அவசர ஆயுதக் கோரிக்கை

நாம்பென், நவ. 29

கம்போடிய தலைநகரான நாம்பென் மீது கம்யூனிஸ்ட்படையினர் நான்கு முனைகளிலிருந்து கடுமையாகத்தாக்கி வருகிறார்கள். மூன்றுவது பெரிய நகரமான சாம்பெங்ஷான் வீழ்ச்சியடையும் நிலையில் இருக்கின்றது. கம்போடிய தலைநகரில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை முறியடிக்க கம்போடியா தாய் லாந்திடம் அவசர ராணுவ உதவி கோரியுள்ளது.

கம்போடியாவின் தலைநகரான நாம்பென்னை நான்கு முனைகளிலிருந்தும் கம்யூனிஸ்ட் படைகள் கடுமையாகத் தாக்கிவருகின்றன. இத்தாக்குதலை வியட்காங்கியரும் வடவியட்நாமியரும் நடத்தியதாகத் தெரிகிறது. இத்தாக்குதலினுல் தலைநகரிலுள்ள பல கட்டிடங்கள் சேதத்துக்குள்ளாகின.

தலைநகரான நாம்பெனிலிருந்து 16 கிலோமீற்றர் தூரத்தில் இப்படைகளின் முக்கிய பிரிவொன்று நிலைகொண்டுள்ளது. கம்போடியாவின் மூன்ருவது பெரிய நகரமான ஸாம்பெங்ஷான் கம்யூனிஸ்ட் படைகளிடம் வீழ்ச்சி அடையும் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நெருக்கடி நிலையினுல் அரசாங்கம் நாட்டில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்பிரகடனத்தால் நகரின் மத்தியில் இருக்கும் வியட்காங்கியரை வேட்டையாடுதல் மிகச்சுலபமாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

கம்யூனிஸ்ட்டுகளின்பெருந் தாக்குதலைச் சமாளிக்க கம்போடிய அரசு தாய்லாந்திடம் அவசர உதவி கோரியுள்ளது.

கம்போடிய இளவரசர் சிஹானுக் கம்யூனிஸ்ட்நாடுகளுக்கு விஜயஞ்செய்திருந்த பொழுது, கம்போடிய ராணுவம்ஆட்சியைப்புரட்சி மூலம கைப்பற்றியது. இளவரசர் நாட்டில் இல்லாதிருந்தபொழுதிலும் அவருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு இளவரசருக்கு ராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது ஆனுல் இளவரசர் சிஹானுக் சீனுவில் இருந்தபடியே போட்டி அரசொன்றை நிறுவி செயற்பட்டுவருகிருர் இவருக்கு ஆதரவாகவே கம்போடியாவில் வியட்காங்கியர் புகுந்து இத்தாக்குதலை நடத்திவருவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இளவரசர் சிஹானுவிற்கு சீனு ஆதரவை அளித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## கி. பாகிஸ்தானுக்கு பிரிட்டிஷ் உதவி

லண்டன். நவ. 29

சூருவழியால் பேரழிவுக்கு இலக்காகியிருக்கும்கிழக்குப் பாகிஸ்தானுக்கு அவசரகால உதவியாக 9 ஹெலிகொப்டர்களையும் நான்கு கப்பல்களையும் 650 துருப்புகளையும் பிரிட்டன் அளித்துள்ளது. உத்தியோகபூர்வமான உதவியாக 10 லட்சம் பவுண்களை பிரிட்டன் கிழக்குப் பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது.

இந்தப் 10 லட்சம் பவுண்களில் அரைவாசித்தொகை உணவுப் பொருட்கள் மருந்து வகைகள், போக்குவரத்து வாகனங்களாக அளிக்கப்படும். எஞ்சிய 500,000 பவுண்கள் வீடுகள், வீதிகள், பாடசாலைகள், ரயில் பாதைகள் நிர்மாணிப்பதற்காக நீண்ட கடனுதவியாக வழங்கப்படும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களூடாக பிரிட்டிஷ் துருப்புகள் உணவு வைத்திய சப்ளைகளுடன் வாகனங்களிலும் படகுகளிலும் சென்றவண்ணமிருக்கிருர்கள். இதுவரை 200,000 பேர் மடிந்துள்ளதாக உத்தியோக பூர்வமான மதிப்பீடுகள் கூறுகின்றன ஆயினும் உண்மையாக உயிர்ச்சேதம் இதை விட அதிகமாக இருக்கலாமென கருதப்படுகிறது. நிவாரண உதவி கிட்டுவதற்குள் பல்லாயிரம்பேர் மரணமடைய லாமென அஞ்சப்படுகிறது.

கொடிகாமம்

## ஐயா கொலை வழக்கு டிசம்பர் 6-க்கு ஒத்திவைப்பு

மட்டுவில், ஞாயிறு

'இறந்தவர் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்பஸ் நிலையத்தின் ஒரு கோணத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார், இரவு 2 மணி இருக்கலாம், நான் அந்த இடத்துக்குப் பலத்த பந்தோபஸ்துக்களை ஏற்படுத்தி ட்டு துப்பாக்கிச் சூட்டிற்கான தடையங்களையும்சாட்சிகளையும் சேகரிப்பதில் ஈடுபட்டேன்.

கொடிகாமம் இ.போ ச. சாரதியான ஐயா கொலை வழக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதி விசேஷ குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கு. துரைசிங்கம் தமது சாட்சியத்தில் இவ்வாறு கூறிஞர்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. வினராசா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் கொடிகாமம் பஸ் நிலையத்தில் வைத்து இ. போ. ச. பஸ் சாரதியான ஐயா என்றழைக்கப்படும் சின்னப்பொடி வேலு என்பவரை கடந்த மார்ச் மாதம் 21ம் திகதி இரவு துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக மூவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

திரு துரைசிங்கம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

'சம்பவம் நிகழ்ந்த இரவு சுமார் 1-30 மணியளவில் துப்பாக்கிச் சம்பவம் பற்றி எனக்குத் தகவல் கிடைத்தது உடனே எனது பொலிஸ் கோஷ்டியுடன் ஸ்தலத்துக்குவிரைந்துசென்றேன், அப்பொழுது அங்கே சுமார் 25பேர்வரை நின்றனர். அதன்பின் சனம் வந்து கூட [illegible] தொடங்கியது. அப்பொழுது பஸ் நிலையத்தில் இறந்தவர் நிறுத்திய பஸ்சுடன் 5 பஸ் வரையில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. இறந்தவர் [illegible] தில் [illegible] பக்கத்தில் கண்டெடுக்கப்பட்டிருந்தன. இதில் முதல் [illegible] தார்.

அட்: சாவகச்சேரிப் பொலிசில் நீர் எவ்வளவு காலம் அதிபராக கடமையாற்றினீர்?

இன்: சுமார் ஒரு வருடம்

அட்: இறந்தவர் ஒருதீவிர தமிழரசுவாதி?

இன்: அப்படித்தான்கேள்விப்பட்டேன்.

அட்: உமக்குத் தெரிந்தளவில் இறந்தவர் தமிழரசு தீவிர வாதியாகஇருப்பதைத் தொடர்ந்து அவருக்கு யாராவது எதிரிகள் இருக்கிருர்களா?

இன்: தெரியாது.

இக்கட்டத்தில் மாஜிஸ்திரேட் டிசம்பர்மாதம் 6 ம் திகதிவரை மேல் விசாரணையை ஒத்தி வைத்தார்.

## சிங்கள ஆசிரியர் வேண்டும்

மாவிட்டபுரம், சனி

கட்டுவன் புலம் அமரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையில் சிங்கள ஆசிரியரை நியமிக்கவேண்டும் என்று கல்வி அமைச்சரைக்கோரும் தீர்மானம் ஒன்று மேற்படி பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கவிசேட கூட்டம் ஒன்றில் நிறைவேற்றப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு. வ. கதிரவேலு தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கீழ்க்கண்டோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. கதிரவேலு, உபதலைவர் திரு நா. கதிரேசு, செயலாளர் திரு. ஜே எவ் வேதநாயகம், திரு. சி. சிவலிங்கம், தனுதிகாரி திரு. க. கந்தசாமி, எட்டுப்பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## நஷ்டஈடு கோரியுள்ளனர்

[illegible] நாச்சி, ஞாயிறு

இப்பகுதி விவசாயி[illegible] வெள்ளத்தால் [illegible]

## ரஷ்ய ஏவாயுத சோதனை வெற்றி

மாஸ்கோ, நவ. 10

அதிக தூரம் உள்ள இலக்குகளைச் சென்று தாக்கவல்ல ஏவாயுதத்தை சோவியத் யூனியன் வெற்றிகரமாகப்பரீட்சித்துள்ளது. சோவியத் யூனியனின் தென் மத்தியபகுதியிலுள்ள பசுபிக் சமுத்திரத்தில் இவ்வேவுகணைப் பரீட்சை செய்யப்பட்டது. அமெரிக்காவிடமுள்ள இது போன்ற ஏவுகணைகளுக்கு இவை நிகரானவை எனச் சொல்லப்படுகிறது.

## புற்றுநோயை ஒழிக்க மின்கதிர்கள்!

கார்ல்ஸ்ரு(டாப்) நவ 29

புற்றுநோயை ஒழிக்க 'எக்ஸ்ரே' கதிர்களுக்குப் பதிலாக, அதி வேகமின் கதிர்களைப் பயன்படுத்துவது நலம். சமீபத்தில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் கார்ஸ்ஸ்ரு நகரில் நடந்த மருத்துவ கருத்தரங்கில் மேற்குப் பெர்லின் மருத்துவ நிபுணர் டெலிப்ஷூன் இத் தகவலை வெளியிட்டார். அதிவேக மின்கதிர்களை கம்பியூட்டரின் உதவியினுல் குறிப்பிட்ட இடத்தில் செலுத்தலாம். புற்று நோய் அழற்சியை கதிரியக்கம் அழித்து வேதனையை வெகுவாகக் குறைக்கும் என்று அவர் கருத்து தெரிவித்து இருக்கிருர்.

## பூமிக்கு அடியில் கட்டுமான வேலை!

ஹாம்பாக், நவ. 29

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் ஹாம்பர்க் நகரில் பூமிக்கு அடியில் நீர் மட்டத்திற்கு கீழாக கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன, எல்பி ஆற்றின் கீழாக புதிய சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. சுரங்க இரயில் பாதை பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டு வலுப்படுத்தப்பட்டு வருகிறது. பூமிக்கடியில் கட்டுமான வேலை நடக்கும் போது ஏதேனும் விபத்து நடந்தால், உதவி செய்யும் பொருட்டு தீயணைக்கும் படைவீரர்களுக்கு விசேஷ பயிற்சி தரப்படுகிறது. இதற்காக தனி முகமூடி [illegible]

## 'தமிழரின் பிர[illegible] போராடித் தீர்க்க [illegible]

ஊரதீவு, ஞாயிறு

"தமிழ் மக்களின் பிரச்னைகளைப் போராடித் தீர்க்க முடியாது. சிங்கள மக்களின் அன்புப் பிணைப்பின் மூலமே தீர்க்கமுடியும். கடந்தகாலங்களில் சிங்கள-தமிழ் மக்களுக்கிடையே நடைபெற்ற சண்டை சச்சரவுகளை மறந்து விடுவதே நல்லது. இனிவரும் காலத்தில் வகுப்புவாதிகள் காவியுடை தரித்து காடுநோக்கி தவம் செய்யப்புறப்பட வேண்டியவர்கள்தான்'.

இவ்வாறு வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு மா. துரைராசா மண்டைதீவில் நடைபெற்ற கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் மண்டைதீவுக் கிளைக்கா[illegible] வே. நடராசா[illegible] நடைபெற்ற இ[illegible] தில் திரு மா. துரைராசா குறிப்பிட்டதாவது:-

அரசியல் இலாபம் கருதி இரு இனங்களையும் பொருதவிட்ட அரசியல் இயக்கங்கள் இன்று அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. இலங்கையில் தற்போது இரு பெரும் கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவமும் சோஷலிசமுமாகும். இந்த இரண்டில் பிடித்தமான ஒன்றை தமிழினம் பின்பற்ற வேண்டும். ஆனுல் சோசலிஷம் தான் தமிழ் மக்களுக்கு உகந்தது. இந்த நாட்டுக்குத் தேவைப்படுவதும் அது தான். அதன்வழி நின்று தமிழினம் தன் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

## பள்ளி மாணவனின் பரிதாப மரணம்

கட்டுவன், ஞாயிறு

பள்ளிமாணவன் ஒருவர் பாடசாலை சென்று திரும்புகையில் கிடங்கொன்றில் விழுந்து மரணமாஞர்.

இப்பரிதாப சம்பவம் கட்டுவனில் அண்மையில் நடைபெற்றது. சமீபத்தில் பெய்த பெருமழையினுல் பெரிய கிடங்குகள்எல்லாம் நீர் நிரம்பி ஒரே வெள்ளக்காடாகக் காணப்பட்டது. இத்தகைய ஒரு கிடங்கினுள்ளேயே மேற்படி மாணவன் பாடசாலையில் இருந்து திரும்புகையில் விழுந்து மரணமாஞர்

இவரது பெற்ருேர்கள் பாடசாலை சென்ற தமது மகன் திரும்பாததையிட்டு அவரைத் தேடிச்செல்கையில் ஆழமானகிடங்கொன்றினுள் இறந்துகிடக்கக் கண்டனராம்.

... ...

## குறித்த நாளில் பாக். தேர்தல் நடைபெறும்

கராச்சி, நவம். 29

பாகிஸ்தான் தேர்தல் இன்னும் பத்துத்தினங்களில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே திட்டமிட்டபடி இத்தேர்தல்குறிப்பிட்ட தினத்தில் நடைபெறுமென்றும் கிழக்குப் பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேர்தல் நடைபெற[illegible]

## அம்புபோல் பாயும் ரயில்வண்டி

மூனிச், நவ. 29

கன வேகத்தில் செல்லும் ரயில் வண்டிகள் ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்றன. எனினும் வேகத்தை அதிகரிக்க மனிதன் மென் மேலும் முயற்சி செய்து வருகிருன்.

அசுரவேகத்தில் செல்லும் ரயில் வண்டிகளைத் தயாரிப்பதில் ஜெர்மன் நிபுணர்கள் தீவிரமாக முனைந்துள்ளனர். 'இன்னும் சில ஆண்டுகளில் ஓடப்போகும் நவீன ரயில் வண்டிகளுடன் ஒப்பிடும்போது, இப்போதைய இரயில் வண்டிகள் பத்தாம் பசலியாக காணப்படும், என்கிருர் ஜெர்மன் கூட்டாட்சி ரயில்வே டைரக்டர் எமில்ஷூ. கல்மூனிச் நகரில்' அசுரவேகரயில்களுக்கு' வடிவமைக்கும் மத்திய நிலையத்தின் தலைவரும் இவரே. ரயில்வேக்கு புதுவடிவம் கொடுப்பதில் இவரும் இவரது சகாக்களும் முனைந்துள்ளனர்.

1955-ஆம் ஆண்டில் 4 நிபுணர்களுடன்'டிசைன்' நிலையம் தொடங்கப்பட்டது. இப்போது 12 நிபுணர்கள் பணியாற்றுகிருர்கள். இவர்கள் முதன் முதலில் வடிவமைத்து தயாரித்தது, ஜெர்மன் 'டிரான்ஸ் ஈரோபா' [illegible]

ஐந்து வருடத்திற் கொருமுறை!

## பட்டதாரிகள் படிப்பை பரிசிலனை செய்ய யோசனை

— டாக்டர் கோத்தாரி

சென்னை நவ. 29

பல்கலைக் கழக மாணவர்கள் பட்டம்பெற்றதும் பெரும்பாலும் தங்கள் படி[illegible]

நாமும் எமது அறிவைவிரைவாக வளர்த்துக் கொள்ள வேண்டும் அறிவு வளர்ச்சி தான் விஞ்ஞானத்தின் உயிர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— டாக்டர் கோத்தாரி

சென்னை நவ. 29

பல்கலைக் கழக மாணவர்கள் பட்டம்பெற்றதும் பெரும்பாலும் தங்கள் படிப்பை நிறுத்திக்கொள்கிறார்கள். பாஸ்போட்போல 5 வருடத்துக் கொருமுறை இவர்களுடைய பட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

இவ்வாறு பல்கலைக் கழக மான்யக் குழுத்தலைவர் டாக்டர் கோத்தாரி சென்னையில் நடைபெற்ற பட்டதாரிகள் விழாவொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இன்று வாழ்வில் அறிவு மிகமுக்கிய இடத்தைப் பெற்றுள்ளது உலகில் அறிவு வளர்ச்சியடைந்து கொண்டேசெல்கிறது. இதற்கேற்ப நாமும் எமது அறிவைவிரைவாக வளர்த்துக் கொள்ள வேண்டும் அறிவு வளர்ச்சிதான் விஞ்ஞானத்தின் உயிர்நாடி எமது மாணவர்கள் வேலை இல்லை என்று சோர்ந்து போகாமல், முயற்சியுடன் ஆக்கப் பணிபுரிய முன்வரவேண்டும்என்று கேட்டுக்கொண்டார்.

கல்லூரி முதல்வர் பேசுகையில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற செயல்களே மாணவர்களை நக்சலைட் போன்ற தீவிர வாதச் செயல்களைச் செய்யத்தூண்டுகிறது. எனவே மாணவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆட்சியினர் முயல வேண்டுமென்றார்.

கூலிப்படை தாக்கியது பற்றி

# ஐ. நா. விசாரணைக்கு கினி கோரிக்கை

கொனக்கிரி, நவ. 29

கினிநாட்டில் அண்மையில் நடைபெற்ற போத்துக்கல் ஊடுருவலைப்பற்றி முழுமையான ஆராய்வொன்றை நடத்துமாறு கினி அதிபர், செக்குட்டூரே, ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி ஊதாண்டைக் கேட்டுள்ளார்

ஐ நா பாதுகாப்புச் சபையினால் அனுப்பப்பட்ட குழு, கினியில் அன்னியப் படைகளின் ஊடுருவல்பற்றி ஆராய்ந்துவிட்டு திரும்பியுள்ளது. இக்குழு கினியில் அந்நியப்படைகளின் ஊடுருவல் பற்றிய தனது அறிக்கையை மிகவிரைவில் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்குமெனத் தெரிகிறது.

'பரீட்சையில் தரப்படுத்தும் புதியமுறை

# ஒரு சமூகத்தை தூண்டி விடும் முயற்சி அல்ல'

— கல்வி அமைச்சர்

கோட்டை, ஞாயிறு

''பரீட்சைகளில் தரப்படுத்தும் முறையை அமுல் செய்வதில் தாம் செய்த முடிவை மாற்றிக்கொள்ளப் போவதில்லை'' என்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்முத் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்.

''சோஷலிசக் கல்வி முறையை ஏற்படுத்த அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது. சமூகத்திலுள்ள சலுகைமுறைகளை நாம் தவிர்க்காவிட்டால் எப்படி சோஷலிசக்கல்விமுறையை ஏற்படுத்தமுடியும்? எதிர்காலத்தில் அனுமதிகளெல்லாம் தரப்படுத்தும் முறையைத்தான் அடிப்படையாகக்கொண்டிருக்கும். அந்த முடிவையே நான் கடைப்பிடிப்பேன்'' என்று கல்வி அமைச்சர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது: ''தரவாரி முறை எந்த சமூகத்துக்கும் எதிரானதொன்றல்ல. ஒரு சமூகத்துக்கெதிராக மற்றொரு சமூகத்தைத் தூண்டிவிடும் முயற்சியுமல்ல. வசதி குறைந்தவர்களுக்கு இது உதவியாகவிருக்கும். வசதி குறைவான பாடசாலைகளிலிருந்தும், விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளற்ற பாடசாலைகளிலிருந்தும் வரும் மாணவர்களுக்குச் சமசந்தர்ப்பமளிப்பதே இதன் நோக்கமாகும்.

உயிர்ச்சேதம் இதை விட அதிகமாக இருக்கலாமென கருதப்படுகிறது. நிவாரண உதவி கிட்டுவதற்குள் பல்லாயிரம்பேர் மரணமடையலாமென அஞ்சப்படுகிறது

பிரிட்டிஷ் பொது மக்களிடமிருந்தும் நிவாரண தரும உதவியாக பெருந்தொகையான பணம்வந்து குவிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பேர்லின் புத்தக வணிகநிலையம்

பேர்லின், நவ. 29

மேற்கு பேர்லின் நகரில் வாழ்கிற புத்தகப்பிரியர்கள் ஏதேனும் குறிப்பிட்ட அபூர்வமான புத்தகங்கள் வேண்டுமானல் ஆங்காங்கு உள்ள கடைகளுக்கு அலைந்து திரிய வேண்டும் இல்லையேல் மே. ஜெர்மனியிலுள்ள புத்தக கடைகளுக்கு கடிதம் எழுதி சில நாட்கள் காத்திருந்த பின்னரே கைக்குகிடைக்கும். பேர்லின் நகர புத்தகப்பிரியர்களின் குறை தீரும் காலம் வந்துவிட்டது.

'பேர்லின் புத்தக வணிக நிலையம்' என்ற புதிய கட்டிடத்திற்கு இப்போது அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. எட்டுமாடிக்கட்டிடம் இது 1972 மே மாதம் முதல் செயற்படத் தொடங்கும். 450 புத்தக ஸ்தாபனங்களும், 1000 புத்தக வெளியீட்டாளர்களும் இக்கட்டிடத்தில் குடியேறுவார்கள். இதற்கு அடுத்தாற்போல மாநில நூலகம் இருக்கிறது அங்குள்ளதைப்போல இக் கட்டிடத்திலும் ஒரு நாள் 80 லட்சம் புத்தகங்கள் இருக்குமா என்று இப்போது சொல்ல இயலாது.

நெடுஞ்சுவரினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற பேர்லின் நகரில் கலாசாலை நிலையம். மேலும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றது பேர்லின் புத்தக வணிகர்கள் கழகம், இப்புதிய விஸ்தரிப்புக் கட்டிடத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிகிறது. இக்கழகத்தில் 60 வணிகர்கள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் இங்கு ஏற்கனவே இசைக்குழு தேசிய கலரியும் இருக்கின்றன. மாநில நூலகம் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றது. இக்கலாசாலை நிலையத்தையமைத்துவருவது. எதிர்காலத்தில் மேற்கு பேர்லின் நகரின் கலாசாலை வாழ்க்கையில்கிழக்கு பேர்லின் நகரில் வாழ்கின்ற உறவினர்களும் நண்பர்களும் பங்கெடுத்துக் கொள்வார்கள் என்ற மேற்கு பேர்லின் மக்களின் நம்பிக்கையைக்காட்டுகிறது.

2100 சதுர மீட்டர் பரப்பளவில் ஏராளமான எஃகு சிமெண்ட் ஆகியற்றைபயன்படுத்தி உறுதியாக கட்டப்படுகிற புதிய வணிக நிலையத்திற்கு 160லட்சம்மார்க் (ஜெர்மன் நாணயம்) செலவாகும் என மதிப்பிடப்படுகிறது மத்திய அரசும் பேர்லின் நகரமன்றமும், இக்கட்டிடத்திற்கு உதவி செய்ய இருக்கின்றன.

இறந்தவர் நிறுத்திய பஸ்சுடன் 5 பஸ் வரையில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. இறந்தவர் கிடந்த இடத்தில் [illegible]பக்கத்தில் கடைகள் இருந்தன. இதில் முதலாவது அப்துல்காதர் என்பவருக்குச் சொந்தமானது

இறந்தவருக்கு அருகாமையிலும் மேற்படி கடை விறாந்தையிலும் அருகாமையிலிருந்த மரத்திலும் துப்பாக்கி குண்டுகள் கண்டெடுத்தேன். இறந்தவர் ஓடிவந்து நிறுத்திய பஸ்சிலும் துப்பாக்கிக் குண்டுகள் பட்ட காயங்களும் அதில் உள்ள மைப்பூச்சு உதிர்ந்தும் அலுமினிய செதில்களும் கீழே கிடக்கக் கண்டேன். அப்பொழுது இறந்தவர் ஒரு வேட்டியும்வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார்.' இக் கட்டத்தில் எதிரிதரப்பு அட்வக்கேட் இன்ஸ்பெக்டரைக் குறுக்குவிசாரணை செய்

விஸ்வமடுக் குள

## நீர் மட்டம் 9 அடிக்கு உயர்ந்துள்ளது

கிளிநொச்சி, ஞாயிறு

விஸ்வமடுக் குளத்தில் நீர் மட்டம் 9 அடிக்கு உயர்ந்துதுள்ளதாக நீர்ப்பாசன இலாகாவினர் தெரிவித்துள்ளனர். தவிர சிறிய குளங்கள் எல்லாம் நீர் நிரம்பி வழிவதால் இப்பகுதிவிவசாயிகள் பீதியடைந்துள்ளனர். வட்டக்கச்சி கண்டாவளைப் பகுதிகளில் வெள்ளச் சேதம் மற்ற இடங்களைவிட அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி - அக்கராயன் வீதியில் நிறைந்த வெள்ளம் காரணமாக நேற்று முன்தினம் போக்குவரத்துச் சேவைகள் பல மணித்தியாலங்களாகத் தடைப்பட்டன. தற்போது நிலைமை சீரடைந்துள்ளமையால் வழமைபோல் போக்குவரத்துச் சேவைகள் தொடங்கியுள்ளன.

## நஷ்டஈடு கோரியுள்ளனர்

கிளிநொச்சி, ஞாயிறு

இப்பகுதி விவசாயிகள் வெள்ளத்தால் தமக்கேற்பட்ட பெருநஷ்டத்துக்காக நஷ்டஈடு தருமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்

பெருமழை காரணமாகப் பெரும்போகச் செய்கையில் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவு செய்து விதைத்த நெல்வயல்கள் நாசமடைந்துள்ளமையால் தமக்கு நஷ்டஈடு பெற்றுத் தருமாறு கிளிநொச்சிஆட்சி மன்றஉறுப்பினரைக் கேட்கவுள்ளனர்.

இப்பிரச்னைகள் பற்றி ஆராய கிளிநொச்சி பகுதிப் பயிர்ச்செய்கைக் குழுவினரின் அவசரக்கூட்டம்அடுத்த வாரம் கூட்டப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

கரவெட்டியில்

## சிரமதான மூலம் வீதி திருத்தினர்

கரவெட்டி, ஞாயிறு

கரவெட்டி மேற்கில் 'உச்சில் ஒழுங்கை' என்றழைக்கப்படும் பிரதான தெருவை கரவெட்டி மேற்கு மத்தொனி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினர் வாய்க்கால்வெட்டி சிரமதானம் மூலம் சீர்திருத்தினர். பல வருஷகாலமாக திருத்தப்படாத நிலையில் இருந்துவந்த இத் தெருவால் மாரிகாலத்தில் பொதுமக்கள் பிரயாணம் செய்யமுடியாது மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தனர். வாலிபர் சங்கத் தலைவர் திரு. க. தியாகராசா தலைமையில் நூற்றுக்கு மேற்பட்டவாலிபர்கள் கடும் மழையையும் பொருட்படுத்தாது இத் தெருவை சீர்திருத்தம் செய்தனர்.

## பாலம் சீர்கேடு

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள பாலம் ஒன்று சீர்கேடாய் இருப்பதனால் தற்போது பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளம் அதனூடாகப்பாயமுடியாது அருகிலே உள்ள வீடுகளில் புகுந்து ஓடுகிறது.

இந்த வீடுகளில் உள்ளவர்கள் கிராம சேவகருக்கு முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

லும் விபத்து நடந்தால், உதவி செய்யும் பொருட்டு தியணைக்கும் படைவீரர்களுக்கு விசேஷ பயிற்சி தரப்படுகிறது. இதற்காக தனி முகமூடி அளிக்கப்பட்டுள்ளது. காற்றழுத்தம் அதிகமுள்ள ஒரு கூண்டுக்குள் சென்று இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

## பெண்கள் கட்சி

மான்ஹீம், நவ. 29

அரசியலிலும் ஏற்கனவே ஆண்களுடன் ஆரணங்குகள் போட்டியிட்டு வருகிறார்கள் ஜெர்மனியில் வருகிற மாநில சட்ட மன்றத் தேர்தல்களின் போது புதிய அரசியல் கட்சி ஒன்று வாக்காளர்களைக் 'கவர' முயலும். அதுதான் 'பெண்களின் அரசியல் கட்சி' பெண்களின் அரசியல் கட்சியின் தலைவி கீஸ்லா காவ்லிக் என்ற குடும்பப் பெண் சில ஆண்டுகளுக்கு முன்பே மான்ஹீம் நகரில் இக் கட்சியைத் தாம் நிறுவியதாகச் சொல்கிறார். இக் கட்சியில் சேர 18,000 பேர்கள் மனுச் செய்துள்ளனர், ஆனல் அனைவருமே பெண்கள் என்று கூறமுடியாது. ஆண்-பெண் சமத்துவம், எல்லா விதங்களிலும் நிலவ வேண்டும் என்பதே இக் கட்சியின் குறிக்கோள். நீதிபதிகளில் பாதிப்பேர் பெண்களாக இருக்க வேண்டும். இதேபோல எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு சம இடம் தரவேண்டும் என்று தலைவி அடித்துச் சொல்கிறார்.

## ''ஐ. நா. தீர்மானம் முழு அளவில் அமுலாக்கவும்''

நியுயோர்க், நவ 29

பாலஸ்தீன அகதிகள் விடயத்தில் ஐக்கியநாடுகள் தீர்மானத்தை முழுஅளவில் தீவிரமாக அமுலாக்க வேண்டுமென்று பாரதம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் விசேட குழுவில் பேசுகையில் இந்தியப் பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும்பேசுகையில், பாலஸ்தீன அகதிகள் படும் கஷ்டங்களை மனிதாபிமானமுள்ள எவரும் உணராமல் இருக்கமுடியாது. அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க ஐ. நாவின் தீர்மானத்தை முழுஅளவில் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

தினத்தில் நடைபெறுமென்றும் கிழக்குப் பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேர்தல் நடைபெற மாட்டாதென்று பாகிஸ்தான் ஜனதிபதி யாஹ்யாகான் தெரிவித்துள்ளார்.

......

## தங்கையைக் காணவில்லையென அண்ணன் புகார்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாலையில் தேநீர் அருந்திவிட்டு விட்டிலிருந்த தங்கையைக் காணவில்லையாம். அவரைத் தேடித்தருமாறு பொலிசாரிடம் உதவி கோரியுள்ளார் அவரது தமையனார்.

பலாலியைச் சேர்ந்த இ. விலோமநாதன் காங்கேசன்துறை பொலிசில் செய்துள்ள புகாரில் தமது தங்கை வீட்டில் தேநீர் அருந்திவிட்டு இருந்ததாகவும், அதன்பின் வீட்டில் இருந்து காணமல்போய் விட்டதாகவும் அவரைத் தேடித்தருமாறும் கேட்டுள்ளார். பொலிசார் பிரஸ்தாப இளம்பெண்ணைத்தேடி வருகின்றனர்.

......

## 'அரியாலை புகையிரத நிலையமென மாற்றுக'

யாழ்ப்பாணம், திங்கள்

''அரியாலைக் கிராமம் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் ஒரு பெரிய கிராமம். புங்கன் குளம் என்பது அதனுட்பட்ட ஒரு சிறு பகுதி. அரியாலை மக்கள் எல்லோரும் இங்குதான் பிரயாணம் செய்வதற்கு வருவார்கள். ஆகவே புங்கன்குளம் புகையிரத நிலையம் என்பதை மாற்றி ''அரியாலை புகையிரத நிலையம் என மாற்றித் தருமாறு போக்குவரத்து அமைச்சரைக்கோருவதென ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தின் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

0 0 0

## பிரிவுபசார விழா

பருத்தித்துறை, ஞாயிறு

வதிரி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் தலைமை ஆசிரியையாகக் கடந்த 15 ஆண்டுகள் கடமையாற்றிய சங். சகோதரி எம். சபீனு ஏ. சி. ஓய்வுபெறுவதை முன்னிட்டு, அவரின்சேவையைப் பாராட்டுமுகமாக ஒரு பிரிவுபசார வைபவத்தை நடாத்த கரவைக் கத்தோலிக்க வாலிபர் கழகம் தீர்மானித்துள்ளது.

இப்போது 12 நிபுணர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் முதன் முதலில் வடிவமைத்து தயாரித்தது, ஜெர்மன் 'டிரான்ஸ் ஈரோபா' எக்ஸ்பிரஸ் டீசல் ரயில் வண்டி ஆகும். ஐரோப்பாவிலேயே சொகுசான வசதிகளுடன் மிக வேகத்துடன் செல்லும் ரயில் வண்டி, இதுவாகும். இதற்காக நிபுணர்கள் கடைப்பிடிக்க பல வழிமுறைகள். புதிய ரயில் வண்டியிலும் காணலாம் 'ஈடி 403' என்பது இதன் பெயர். 1972-ஆம் ஆண்டிலிருந்து பிரீமன். புர்ஸ்பேர்க் மூனிச் ஆகிய நகரங்களுக்கிடையே இந்த ரயில் ஓடத் தொடங்கும். 'டிரான்ஸ் ஈரோபர்' எக்ஸ்பிரஸ் ரயில்வண்டிபோல இப்புதிய ரயில் வண்டியும் கவர்ச்சிகரமாக வர்ணம் பூசப்பட்டிருக்கும் 'டிரான்ஸ்-ஈரோபர்' ரயில் வண்டியின் முனை, நாயின் முகம் போல அமைந்திருக்க. 'ஈடி-403' ரயிலின் முனை, திமிங்கிலத்தின் வாய்போல அமைந்து இருக்கும். இப் புதிய மின்சார ரயில் வண்டி, மணிக்கு 200 கிலோ மீட்டர் செல்லும். ரயிலின் உட்பகுதிகள், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அமைக்கப்படும். இன்னும் பலவிதமான வசதிகள் இருக்கும். இப்போதைய ரயில் வண்டிகளில் பூசப்பட்டுள்ள வர்ணம், கவர்ச்சிகரமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. எனவே புதிய ரயில் வண்டிகளில், நீலம், சிகப்பு, வெளிர்சிகப்பு ஆகிய வர்ணங்கள் பூசப்படும். இப்போது ஓடுகிற ரயில் வண்டிகளுக்கு பளபளப்பான வெள்ளை வர்ணம் பூசப்படும்.

எதிர்கால ரயில் வண்டி எப்படி இருக்கும்? 'ஸ்டெயின்லஸ் ஸ்டீல், அலுமினியம் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ரயில் வண்டி, வில்லில் இருந்து விடுபட்ட அம்பு போல, அசுர வேகத்தில் சீறிப் பாய்ந்து செல்லும்; புழு போல ஊர்ந்து செல்லாது' என்று ஜெர்மன் ரயில்வேயின் வடிவமைப்பு நிபுணர் எமில்ஹூ கூறுகிறார்.

......

## ஓய்வு பெறுகின்றனர்

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி றோமன் கத்தோலிக்க அதிபர் வண எஸ். சபீனு ஆசிரியைகள் திருமதிகள் ஏ. அகஸ்தின், அக்னேஸ் அந்தோனிப்பிள்ளை எஸ். ஆறுமுகம் இவ்வாண்டு இறுதியில் ஓய்வு பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

... அழிவு உள்ளது ஆதலால், அதனால் ... பெருமையும் அழிவுள்ளது; கல்வி அழிவில்லாதது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது.

— நாவலர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 15-ந் திகதி (30-11-70)

## யாழ்ப்பாணத்தில் கடும் மழை

யாழ்ப்பாண மாவட்டத்தில் சென்ற மூன்று நாட்களாகப் பெய்யும் அடை மழையால், பொதுமக்கள் படும் அவலம் கொஞ்சமன்று, மழைவேண்டியதுதான். ஆனால் அதிக மழை பெய்தால் வெள்ளங்கள் ஏற்பட்டு பயிர் பச்சைகள் நாசமாவதுடன், பள்ளத்தாக்கான இடங்களிலே வீடுகளுக்குள்ளும் தண்ணீர் புகுந்து மக்கள் பெரும் சங்கடத்துக்கு உள்ளாகின்றனர். காய்கறி விற்றும், மீன் பிடித்தும் அன்றாடம் கைக்கும் வாய்க்குமாகப் பிழைக்கும் எளிய மக்களின் கஷ்டங்களை விளக்கத்தேவையில்லை. இத்துடன் மழை நின்றால் நல்லது நிற்காவிட்டால் யார் என்னசெய்ய முடியும்?

இந்தநிலையில் நாம் செய்யக்கூடியது, மழையால் அவதிப்படும் மக்களின்துயரங்களை குறைக்க ஆங்காங்கே கூடிய உதவிகளைச் செய்வதுதான். அரசாங்கம் இந்த நிலையை அவதானித்து ஆங்காங்கே தேவைப்பட்டவர்களுக்கு அவசர உதவிகள் செய்ய உடன் முன்வருமென்றே நம்புகிறோம். இதில் சற்றும் காலதாமதம் செய்யப்படாது வீடு வாசல்களை விட்டு வெளியேற நேரிட்ட குடும்பத்தார் சமைக்கமுடியாததாகையால், அவர்களுக்கு உணவை இலவசமாக விநியோகிக்க ஆவன செய்ய வேண்டும். எளிய மக்கள் மாற்று ஆடையின்றி தவிப்பர். ஆனால் அவர்கள் மானஸ்தர்கள். வாய்விட்டுக் கேட்கமாட்டார்கள். அவர்களுக்கு அவசியம் தேவையான துணிகளை இச்சமயம் வஸ்திரதானமாகக் கொடுப்பது பெரிய உபகாரமாக இருக்கும். எல்லாம் அரசாங்கம்தான் செய்யவேண்டுமென்று இராமல், வசதியுள்ள மக்கள், ஆங்காங்கே ...

... என்றும் அமைச்சரை அவர் கேட்டுக்கொண்டார். அமைச்சர் மைத்திரிபால சேனநாயகா, இடையில் குறுக்கிட்டு, இ. போ. ச. விடமே படகுசேவைப் பொறுப்பை கையளிப்பது பற்றி யோசிப்பதாகவும் தெரிவித்தார். இப்பகுதி மக்களின் வசதியைப் பற்றி அமைச்சர் மனதில் கொண்டிருப்பது நல்லது; பஸ் போக்குவரத்தில் பல பல குறைகள் இருப்பதைப் பார்க்கையில் படகுசேவையையும் அவர்களிடம் ஒப்புவித்தால், நிலைமை மேலும் மோசமாகுமோ என்று சந்தேகம் ஏற்படக்கூடும். என்றாலும் இ. போ. ச. விடம் இப் பொறுப்பை சிலகாலமாவது பரீட்சார்த்தமாக ஒப்புவித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்துப் பார்க்கலாம்.

மழையால் வீடுகள் எல்லாம் ஈரமாகி, ஒழுகுகின்றன. அநேகமாக யாழ்ப்பாணத்திலே மச்சுவீடுகளைத் தவிர மற்ற வீடுகளில் எல்லாம் இதேநிலைதான். ஈரத்தில் கீழே படுக்கவும் முடிவதில்லை இந்த மக்களின் தவிப்பு எப்பத்தான் தீரப்போகிறதோ? இவர்கள் ஆறுதலடைவதற்கு ஒரேவழி, கிழக்கு பாகிஸ்தான் மக்களை நினைத்துக் கொள்வதுதான் போலும்! அங்கு ஏற்பட்டதுபோன்ற பயங்கரச் சூறாவளி இங்கு மீண்டும் அடிக்காமல் இருப்பது பற்றி நன்றிதெரிவிக்க வேண்டியதே என்றாலும் எளிய மக்கள் இயற்கையின் சோதனையால் அவதிப்படும் போது ஆங்காங்கே வசதியுள்ளவர்கள், மனிதாபிமானம் காட்டி கூடிய உதவிகளைச் செய்வதற்கு மேலான சந்தர்ப்பமாகும்- எல்லாம் அரசாங்கம் தான் செய்ய வேண்டுமென்று மக்கள் வாளா இருப்பது கூடாது.

பல இடங்களிலே மழை ...

புற்று நோய் வாரம்

# புற்று நோயைக் குணப்படுத்தலாம், ஆனால் . . . . . ?

ஆஸ்பத்திரிகளிலுள்ள பதிவுப் புத்தகங்களைப் பார்த்தால் இலங்கையில் புற்றுநோய் அதிகரித்து வருவது போலத் தோற்றும். 1944 ம் ஆண்டில் இலங்கை முழுவதிலும் ஆக 99 பேரே புற்று நோய்க்கு வைத்தியம் தேடி ஆஸ்பத்திரிகளுக்கு சென்றனர். 1950 ல் இத்தொகை 2377 ஆகவும் 1960 இல் 3192 ஆகவும் அதிகரித்தது. இன்று இன்னும் அதிகமாயிருக்கக்கூடும். இதற்கு காரணங்கள் இரண்டு,

புற்றுநோய் பெரும்பாலும் 45 வயதுக்கு மேற்பட்டவர்களையே தாக்குகின்றது இளம் வயதினரை அது சொற்பமாகவே தாக்கும். நவீன விஞ்ஞான வைத்தியத்தின் பலனாக குழந்தை மரணவிகிதம் மிகவும் குறைந்துவிட்டதாலும் ஆட்கொல்லிகள் என்று கருதப்பட்டு வந்த மலேரியா, கயரோகம், நெருப்புக்காய்ச்சல் முதலிய கொடிய நோய்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப் பட்டபடியாலும் பொதுவாக மக்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. எனவே முன்னைவிட அதிக எண்ணிக்கையானவர்கள் முதியவர்கள் சென்ற பிரிவில் உயிரோடிருந்து வருகிறார்கள்.

இரண்டாவதாக புற்று நோயைப் பற்றிய அறிவும் ஆரம்பக் கட்டத்தில் சிகிச்சை செய்தால் அதை முற்றாக அழித்து விடலாமென்ற நம்பிக்கையும் பொதுமக்களிடத்தில் வளர்ந்துவருகிறது. ஆகையால் முன்னைவிட அதிகமானோர் ஆஸ்பத்திரி கிளினிக்குகளுக்கு விஜயம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

இருப்பினும் பயங்கர வியாதிகள் என்ற ஜாபிதாவில் புற்றுநோய் இன்று முதலாவதாக நிற்கிறது.

சாதாரண மக்கள் இதை 'கட்டி வளருதல்' என்று சொல்வதுண்டு.

கட்டிகளில் இரண்டுவகையுண்டு. தேகத்தின் ஒரே பகுதியில் வீக்கம் கண்டு உயிருக்கு மோசம் விளைவிக்காமலிருப்பது சாதாரண கட்டியாகும். மற்றது தேகத்தில் ஏதாவதொரு சிறிய உறுப்பு எக்கச்சக்கமாக இயற்கைக்கு விரோதமாக வளர்ந்து மற்ற உறுப்புகளுக்குப் பரவி அதனால் ஏற்படும் கட்டி இதுதான் உயிருக்கு பங்கம் விளைவிக்கும் 'மாலிக்னன்ட் டியூமர்' என்பது.

புற்று நோய் பிறநோய்களைப்போல கிருமிகளால் உண்டாவதல்ல. தேகத்திலுள்ள ஒருபகுதி அளவுக்கு மிஞ்சி வவருவதாலேயே இது உண்டாகிறது. எப்படி எதற்காக உண்டாகிறதென்று இன்னும் ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. ஆகையால் நோய் கண்டிருக்கிறதென்று ஆரம்பக் கட்டத்தில் எவரும் கண்டுபிடிக்க முடியாது. தேகத்தின் நுண்ணிய பாகங்கள் அடிக்கடி தேய்ந்து உராயப்படுவதால் தான் புற்றுநோய் உண்டாகிறதென்பது ஒரு பொதுக்கொள்கை. அடிக்கடி வெற்றிலை சப்புவது, சிகரெட் இழுப்பது கூர்மையான சூத்தைப்பல், சதா ஒரே யிடத்தில் அண்டிக்கொண்டிருக்கும் பொத்தான் அல்லது ஊசி இப்படி ஏதாவதொன்று விரணம்தோன்றுவதற்கு காரணமாயிருக்கலாம்.

அனுபவத்திலிருந்து, புற்றுநோய் உண்டாகும்போது பின்வரும் அறிகுறிகள் தோன்றலாம் என்று தெரிய வருகிறது. இக்குறிகள் தோன்றியவுடனே கிளினிக்குக்கு போய் சோதிப்பது உத்தமம். காலதாமதம் ஆபத்தில் முடியலாம்.

1. ஆறுத புண் (முக்கியமாக வாய், தொண்டைப் பகுதிகளில்) 2 அசாதாரணமான ரத்தப்போக்கு (முக்கியமாக பெண்களுக்கு) 3 உடம்பில் நோயில்லாத கட்டி அல்லது வீக்கம் (முக்கியமாக மார்பகத்தில்) 4 தொடர்ந்து அஜீரணம் அல்லது வயிற்றாலை போவதில் திடீர் மாற்றம் 5 இடைவிடாத இருமல் அல்லது தொண்டை வறட்சி 6 மச்சம் அல்லது பாலுண்ணிகளில் நிறமாற்றம் 7 விழுங்குவதில் கஷ்டம்.

இந்த ஏழு அபாய குறிகளும் காணப்பட்டால் புற்றுநோய் நிச்சயமாக வந்துவிட்டதென்று அர்த்தமல்ல இவற்றில் ஏதாவது நீடித்து கொஞ்சக்காலம் இருந்துவந்தால் டாக்டரிடம் காட்டி புற்றுநோய் இருக்கிறதா இல்லையா என்பதை அறிந்து கொள்ளலாம்.

புற்றுநோயைக் குணப்படுத்த இரண்டு முறைகள் இப்பொழுது கையாளப்படுகின்றன. ஒன்று சத்திர சிகிச்சை - வேண்டாத வளர்ச்சியை அப்படியே வெட்டி அப்புறப்படுத்தல். ஆனால் உடம்பில் சில பகுதிகளில் சத்திர சிகிச்சை செய்து கொள்வது கடினம்.

மற்றது றேடியோ கதிர் ஊட்டல், வேறு மருந்து வகையோ ஊசி வகையோ கிடையாது.

ஆகையால் மேலே சொன்ன அறிகுறிகள்கண்டவுடனே சந்தேகத்துக்கிடம் வைக்காமல் உடம்பைச் சோதித்துப்பார்ப்பது மிகவும் விரும்பத்தக்கது. கவனியாதுவிட்டால் பின்னர் மனவருத்தப்பட நேரும்.

— வழிப்போக்கன்

ஜெயராஜ் எழுதுவது

அமெரிக்காவிலே சிறப்பாக வாலிபர்கள் பலர் யோகாசனம் செய்து பெரும் நன்மைகளைப் பெற்றுவருகிறார்களாம். நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ள 71 வயதான மாதாஜி இந்திராதேவி இதைத் தெரிவிக்கின்றார்.

''எனக்கு முப்பது வயதாக இருக்கையில் தீராத இதய நோயால் அவதிப்பட்டேன். நல்ல மருந்து கிடைக்குமோ என்று ஐரோப்பா எல்லாம் என் கணவரும் நானும் சுற்றினோம். முடிவில் 'யோக' சிகிச்சைபெற்று இரு வாரங்களுக்குள் குணமடைந்து விட்டேன்'' என்கிறார் அவர்

தீராத நோய்களைத் தீர்த்துக்கொள்ள அமெரிக்கர் நமது யோகக் கலையைப் பயின்று, பயன்பெறுகையில், நம்மில் பலரும் ஆஸ்பத்திரிகளையும், டாக்டர்களையும், மருந்துகளையும் தான் நம்பி வாழ்கிறோம். மருந்துகளால் நன்மையில்லாவிட்டால், மனம் உடைந்து பல டாக்டர்களையும், மருந்துகளையும் மாற்றிமாற்றிப் பார்க்கின்றோம். யோகாசன மூலம் நம் உடலையும், மனதையும் பலப்படுத்த நம்மில் எவ்வளவு பேர் முன்வருகிறோம்? இந்த வெள்ளைக்காரத் தாய் மூலம் யோகக் கலையின் மேன்மையை அறிந்தபிற்பாடாவது தொட்டதற்கெல்லாம் ஆஸ்பத்திரிகளுக்கும், டாக்டர்களிடமும் போத்தல்களைத் தூக்கிக்கொண்டு ஓடுவதைவிட்டு, தங்கள் வீட்டில் இருந்தபடியே யோகாசனங்கள் செய்து காசுபணம் செலவின்றி நன்மைபெற முன்வருவார்களா?

நேருஜி தினசரி சிரசாசனம் செய்வாராம். இந்தியாவில் சில பள்ளிக்கூடங்களிலும் இதை மாணவர்களுக்குப் பயில்விக்கிறார்கள். அமெரிக்க வாலிபர்களே யோகாசனம் செய்வதால், நம் வாலிபர்களுக்கும் பள்ளிக்கூடங்களில் இதை ஏன் பயில்விக்கக்கூடாது?

நாலரை வருடங்களுக்கு முன் யூஜின் பீட்டர்ஸ் எனும் மாதாஜி இந்திரா தேவி, பகவான் சாய்பாபாவின் சிஷ்யரானவர். யோகாசனங்களை முறைப்படி பயின்றதால், இந்த வயதிலும் நல்ல தேகக்கட்டோடு இருக்கிறார் சாய்பாபாவின் பெயரைக் கேட்டதும் மாதாஜி கண்ணை மூடிக்கொண்டு மெய்மறந்து விடுகிறார்.

''சாய்பாபா ஓர் அவதாரம் பகவான். இந்தியாவில் அவரைப்போல் வேறு யாருமில்லை'' என்கிறார். அமெரிக்காவிலே கலிபோர்னியாவில் யோகப் பயிற்சிக்கான நிலையமொன்றை ஸ்தாபித்துள்ளதாயும், அங்கு யோகக்கலை ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து, இதை உலகமெல்லாம் பரப்பப்போவதாகவும் தெரிவிக்கிறார். பிரசங்கங்கள், படங்கள், தியானம், பஜனை இவற்றின் மூலம் ஸ்ரீ சாய்பாபாவின் உபதேசங்களைப் பரப்புகின்றனர்.

கொழும்பிலே சைவமங்கையர் கழகத்திலே நேற்று முன்தினம் காலை பல மணி நேரம் இருக்கையில் அவரைப் பல பெண்மணிகளும் வணங்கி ஆசிபெற்றனர். நேற்றுக் கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர். மாலையில் வீரசிங்கம் மண்டபத்தில் பேசினார். நாளை இங்கிருந்து பிரசாந்திநிலையம் (ஸ்ரீ சாய்பாபாவின் ஆசிரமம்) செல்லுகின்றார்.

அமெரிக்காவிலே பல இடங்களில் வாலிபர்கள் ஸ்ரீகிருஷ்ண நிலையங்கள் ஏற்படுத்தி பஜனைகளை செய்தும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஓதி மனச் சாந்தி பெறுவதாக நேரில் கண்ட ஓர் அன்பர் தெரிவிக்கிறார்.

0 0 0

எம்பிரான் இமையோரகள் தமக்கெலாம்
இன்பராகியிருந்த வெம்
ஈசனார்
துன்ப வல்வினை போகத்
தொழுமவர்க்கு
அன்பராகி நின்றார்
அன்னி யூரரே

— அப்பர் அடிகள்

வட பகுதி

# ப. நோ. கூ. ச. விதை உருளைக் கிழங்குவிநியோகத்தில்பாகுபாடு?

புத்தூர், ஞாயிறு

வடபகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சில விவசாயிகளுக்கு வழங்கும் விதை உருளைக் கிழங்கு விநியோகத்தில் பாரபட்சம் காட்டி வருவதாக பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் விவசாயக் கடன் பெற்று திரும்ப வழங்காத ... ஜர் மூலம் புகார் செய்துள்ளனர்,

இது சம்பம்தமாக எமது பிரதிநிதி வடபகுதி கூட்டுறவு இலாகா அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பழைய கடனுக்கும் ... விநியோகத்துக்கும் ... தொடர்புமில்லை என்றும் ...றும் அவர் கூறினார்.

புத்தூர் நவகிரி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி ... தோப்புக் கொலனி ... பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் விதை உருளைக்கிழங்கை ரொக்கப் பணத்துக்கு வழங்கமறுப்பதாக கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் நேற்றுப்பலர் முறையிட்டனர் ...

உருளைக்கிழங்குக்கு பணம் ...

கோப்பாய்

## ஆஸ்பத்திரிகள் தேவைபற்றி எம். பி.

நல்லூர் ஞாயிறு

கோப்பாய் ஆஸ்பத்திரி மருத்துவ உதவிப்பணியாளருக்கும், தாதிமாருக்கும் குடிமனைகள் அமைத்துக் கொடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை வேண்டியுள்ளார்.

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு நீர் விநியோகம், அம்புலன்ஸ்வான்சாக்கடைத் திட்டம் என்பன வேண்டுமென்றும் அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு பிரசவ விடுதி நிர் ...

## பரந்தனில் உப வானொலி நிலையத்தைநிறுவவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது பெரிய உபகாரமாக இருக்கும். எல்லாம் அரசாங்கம்தான் செய்யவேண்டுமென்று இராமல், வசதியுள்ள மக்கள், ஆங்காங்கே இப் புண்ணியத்தைச் செய்ய வேண்டும்.

மழையால் பஸ்போக்குவரத்து பல இடங்களில் தடைப்பட்டுள்ளன. தீவுப் பகுதி மக்களின் சங்கடங்களை அத் தொகுதியின் பிரதிநிதி பண்டிதர் இரத்தினம் பார்லிமெண்ட்சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார் பண்ணைப்பாலத்துக்கு மேல் இரண்டடிக்கு தண்ணீர் பாய்வதால், தீவுப் பகுதி பஸ்சேவையே நடைபெறவில்லை. ஏறக்குறைய இருநூறு யார் தூரத்தை உயர்த்திவிட்டால் இத் துன்பம் ஏற்படாதென்றும், இதை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்றும் படகு சேவையையும் சீர் செய்ய வேண்டும் சந்தர்ப்பமாகும்- எல்லாம் அரசாங்கம் தான் செய்ய வேண்டுமென்று மக்கள் வாளா இருப்பது கூடாது.

பல இடங்களிலே மழையால் பயிர்கள் அழிந்து, கமக்காரர்களுக்கு அதிக நஷ்டமென்று தெரிகிறது. அடிக்கடி இவ்விதம் ஏற்படுவதால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிக்க, பயிர்களுக்கான காப்புறுதிக்கு ஏற்பாடுசெய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்படி ஒன்றும் செய்யவில்லை. உணவு உற்பத்தி செய்பவர்களுக்கு எதிர்பாராத கஷ்ட நஷ்டங்களை ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பெருங் கடமை. பயிர்களுக்கான காப்புறுதித்திட்டத்தை தாமதமின்றி ஏற்படுத்த எம். பி மார்கள் அரசாங்கத்தை தூண்டி அதை அமுலுக்குக் கொண்டுவரச் செய்தல் அவசியம்.

பாரபட்சம் காட்டி வருவதாக பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் விவசாயக் கடனை பெற்று திரும்ப வழங்காத விவசாயிகளுக்கு விதை கிழங்கை வழங்க பல சங்கங்கள் மறுக்கின்றனவாம், இது சம்பந்தமாக வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் பல பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மகஜர்பு கொண்டு கேட்டபோது. பழைய கடனுக்கும், விதை உருளைக்கிழங்கு விநியோகத்துக்கும் எதுவித தொடர்புமில்லை என்றும் பணம் கொடுக்கும் விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். விதைவெங்காயம் விநியோகிக்கும்போதும் இவ்விதமே நடைபெறவேண்டும் என் உருளைக்கிழங்கை ரொக்கப் பணத்துக்கு வழங்கமறுப்பதாக கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் நேற்றுப்பலர் முறையிட்டனர்.

உருளைக்கிழங்குக்கு பணம் வழங்கும் சகல விவசாயிகளுக்கும் அவற்றை கட்டாயம் விநியோகிக்கவேண்டுமென்று வடபகுதி விவசாய இலாகா தெரிவித்தது.

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு நீர் விநியோகம், அம்புலன்ஸ்வான்சாக்கடைத் திட்டம் என்பன வேண்டுமென்றும் அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு பிரசவ விடுதி நிர்வாகக்கட்டிடம் வைத்தியர் குடிமனை, குழாய்த்திட்டம் என்பன உருவாக்கப்படவேண்டும் என்றும், வளலாய் இடைக்காட்டில் மத்தியமருந்தகம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்'

# யாழ். தேர்தல் ஆட்சேப வழக்கு . . . .

(2-பக்கத் தொடர்ச்சி)

நான் இப்பொழுது 27-10-70 எனத் திகதியிடப்பட்ட டாக்டர் இராஜேந்திரத்தினல் மனுதாரருக்கு வழங்கப்பட்ட வைத்தியப் பத்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். மனுதார் திருச்சிக்குப் புறப்பட்ட அடுத்த நாள் இத்திகதி குறிப்பிடுகிறது. இந்தப் பத்திரத்தைக்கொண்டு மனுதாரின் வழக்கறிஞர் வழக்கை 2-11-70-ந் திகதிக்கு ஒத்தி வைக்கும்படி கோரினர் அன்றைய தினம் நான் வெளியிட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்ட காரணங்களைக்கொண்டு வழக்கு ஒத்திவைப்பதற்கு மறுக்கப்பட்டது. மறுபடியும் 14-11-70-ந் திகதி மேற் குறிப்பிட்ட அதே டாக்டரிடம் பெற்ற ஒரு வைத்தியப் பத்திரம் அனுப்பப்பட்டது. அதன் பேரிலும் வழக்கை ஒத்திவைக்குமாறு கோரப்பட்டு அக்கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. இந்த வைத்தியப் பத்திரத்தில் மனுதாருக்கு இரைப்பை அழற்சி எனவும் அவர் நடமாடித் திரிய இயலாததாகையால் படுக்கையிலிருந்து பூரண ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது இப்பொழுது மற்றுமொரு டாக்டரிடமிருந்து 18-11-70-ந் திகதி மனுதார் பெற்று அனுப்பிய மற்றுமொரு வைத்திய பத்திரமும் எங்களிடமிருக்கிறது, இந்த டாக்டரின் பெயர் எம். வி பாட், எம் எஸ் எவ் ஐ. சி எஸ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (இந்த எழுத்துக்கள் என்னத்தைக் குறிக்கின்றன என்றுஎனக்குவிளங்கவில்லை) ஆனல் டாக்டர்தனதுதபால் தலைப்பில் 'சத்திர சிகிச்சை பேராசிரியர், தஞ்சாவூர் வைத்தியக் கல்லூரி, தஞ்சாவூர் என விலாசமிடப்பட்டுள்ளார் 18-11-70-ம் திகதிய வைத்திய த்திரத்தில் மனுதார் இரைப்பைப் புண் நோயினல் அவதிப்படுகிருர் எனக் குறிப்பிட்டுள்ளது இதற்கு முந்திய வைத்தியப்பத்திரத்தில்மனுதாருக்கு இரைப்பை அழற்சி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது

3-வது வைத்தியப் பத்திரத்தில் உடனடியாக இவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட வேண்டும், இவர் குணமடைய 3 வாரங்களாவது எடுக்கும். ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறுமுன்னர் இவரால் இவ்வேளையில் நீதிமன்றத்துக்குச் செல்ல இயலாது இவ் வைத்தியப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது. ஆகவே இவர் நீதிமன்றத்துக்கு செல்ல இயலாது என்ற வசனம் எனது ஆவலை மேலும் தூண்டியுள்ளது. முன்னைய இரு வைத்தியப் பத்திரங்களையும் மனதில் வைத்துக்கொண்டு இந்த 3-வது பத்திரத்தை கவனமாக நோக்குமிடத்து இப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் குறித்து எனக்கு கடும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் பெழுது மனுதாரின் வழக்கறிஞர் மனுதாருக்கு முறையில் சிகிச்சையளிக்கவேண்டுமெனச் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். ஆனல் நான் இத்தகைய சிபார்சை இந்த வைத்தியப் பத்திரத்தில் காணவில்லை. நான் இந்த வைத்தியப் பத்திரத்தை இதற்கு முன்னர் வந்ததோடும் திருவாளர்கள் எம் ஜயசுந்தரா, தம்பு, ஃபீச் ஆகியோரது சாட்சியங்களோடும் வைத்து ஆராய வேண்டியிருக்கிறது. இவ்வாறு ஆராய்ந்தபொழுது நான் இந்த வைத்தியப் பத்திரத்தில் திருப்தியடையவில்லை என்பதையும் இதை என்னல் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனவே மனுதாரின் வழக்கு ஒத்திவைப்புக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.


இதன்பின்னர் வழக்கறிஞர் தொடர்ந்து வழக்கை நடத்த விரும்பவில்லை எனத் தெரிவித்தார், தமது சாட்சி வீரமுனி பியதாச சில்வாவையும் ஆஜர் படுத்துவதாகஇல்லை எனத் தெரிவித்தார், மனுவின் 6 வது பந்தியில் குறிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக இவர் சாட்சியமளிப்பார் என மனுதார் தெரிவித்திருந்தார். நிலைமை என்னவென்ருல் எஞ்சியுள்ள குற்றச்சாட்டுகள் மீதும் சாட்சியமில்லை ஏப்ரகாம் சிங்கோவை மனுதாராகவும் திருமதி குசுமா குணவர்த்தனவை எதிர் மனுதாராகவும் கொண்ட வழக்குத் தீர்ப்பில் தேர்தல் சட்டத்தின்படி ஒரு தேர்தல் நீதிபதியின் பணிகள் முற்றிலும் நீதிபரிபாலனத்துக்குட்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது

விசாரணையின் போது குற்றச்சாட்டுகளின்மீது சாட்சியம்இருககவில்லை. மேலும் தொடர்வதற்கு நீதிபதிக்கு கட்டுப்பாடும் கிடையாது. மனுவை அவர் தள்ளுபடி செய்யத்தான் வேண்டியிருந்தது. எனவே இப்பொழுது எஞ்சியிருப்பது என்னவென்ருர். மனுவைத்தள்ளுபடி செய்வதுதான், அதையே நான்செய்கின்றேன்.

மனுதாரின் நடத்தையை உத்தேசித்து மனுதாருக்கு எதிராக நான் விடுக்கும் உத்தரவில் செலவுகள், தண்டனைக்குரியதாக இருக்கவேண்டும் என்று முதல் மனுதாரரின் வழக்குரைஞர் கேட்டுக் கொண்டார். மனுதாரின் நடத்தை மிகவும் தகைமையற்றதுஎன்று நான் கருதுகிறேன். ஏற்கனவே பின்போடுவதற்கான இரு மனுக்கள் மீதான உத்தரவுகளின்போது செலவுகள் பற்றிய உத்தரவுகள்விடுத்திருக்கிறேன். இவைகள்பற்றி தீர்க்கமாக ஆராந்தபின் தேர்தல் சட்டத்தின்33 (1) விதியின் படி அறவிடப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். மனு இத்தால் செலவுடன் தள்ளுபடி செய்யப்படுகின்றது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# றமழான் குரலொலி



"நீங்கள் ஒருவரோடொருவர் கரத்தோடு கரம்பிணைத்து (முசாபஹா செய்து) கொள்ளுங்கள். அது உங்களிடையே குரோதம் இல்லாது போக்கிவிடும் மேலும் நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளுங்கள். அது உங்கள் அன்பை வலுவடையச்செய்யும். இன்னும் உங்களிடையே வேரூன்றி இருந்த பகைமையை நீக்கிவிடும்."

(நபிமொழி: கூறுபவர்: அதாஇன் குராசானி (றழி) ஆதாரம் மாலிக்)

குலப்பெருமை, கோத்திரப்பெருமை என்பவற்றைக்காப்பதற்காக பரம்பரை வழிமுறையாக பழிக்குப்பழிவாங்கி பகைமையை வளர்ந்து வந்த அராபியர்களை அன்புக் கயிற்றினல் பிணைத்து சகோதர வாஞ்சையோடு வாழச் செய்தபெருமை அண்ணலார் நபிமுஹம்மத் (ஸல்) அவர்களைச் சாரும். அன்னவர் (ஸல்) அவர்கள், அன்புடன் வாழ வகுத்துக்கொடுத்த வழிமுறைகளுள் ஒன்றையேமேலுள்ள ஹதீஸ் அறிவிக்கிறது ஒருவர் மற்ருருவரை நீண்ட இடைவேளையின் பின் சந்திக்கும்போது தோளுடன் தோள் சேர்ந்து கட்டி அணைத்து ஆலிங்கனம் (முஆனகா) செய்தும், முத்தம் கொடுத்தும் ஏனைய வேளைகளில் (முசாபஹா) கைகொடுத்தும் அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது இறைவன் சாந்தி பொழிவாகுக) என்று கூறியும், அன்பளிப்பு (ஹதியாக்)களை பரிமாறியும் அன்பை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்றே இஸ்லாம் கூறுகின்றது. நபிகள்நாயகம் காட்டிய வழியில் நாமும் நடந்து அன்பைப்பெருக்குவோம்.

அஸ்ஸலாமு அலைக்கும்:

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள் :-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-45 | 6-05 | 12-20 | 3-22 | 5-53 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-13 | 4-30 |

## மலேரியா பரவுகிறது

பூநகரி, ஞாயிறு

பூநகரிப் பகுதியில் மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது தனுல் வைத்தியசாலையில் தினம் தினம் நோயாளர் குவிந்த வண்ணம் இருக்கின்றனர். ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் நோயாளர் நிரம்பியுள்ளதால் இடமின்மை காரணமாக வீட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலை நோயாளருக்கு ஏற்பட்டுள்ளது.

## மின்சார இலாகா வாகனங்களால் கஷ்டம்

கிளிநொச்சி, ஞாயிறு

இங்கு 'லகஸபான' மின் விநியோகத் திட்ட வேலைகளுக்காகப் பாவிக்கப்படும் மோட்டார் வண்டிகளால் பாதசாரிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மிதமிஞ்சிய வேகத்துடன் வீதிகளில் வாகனங்களை ஓட்டுவதாலும், ஒரே வேளையில் மின்சார இலாகா வாகனங்கள் வீதிகளில் செல்வதாலும், பொதுசனங்களும் தனியார்வாகனங்களும் பிரயாணம் செய்வது கஷ்டமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்விடயம் பொலிஸாரின் கவனத்திற்குக்கொண்டு வரப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சிவஞானபோத விரிவுரைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் 3-12-70 தேதியிலிருந்து சிவஞான போதவிரிவுரைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இவ் விரிவுரைகள் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளையின் பொறுப்பில் ஒவ்வொரு போயாதினத்திலும் அதற்கு முன்தினமும் நடைபெறும்.

# பரந்தனில் உப வானெலி நிலையத்தைநிறுவவேண்டும்

— யாழ். நகர மேயர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'பரந்தனில் உப வானெலி நிலையத்திற்கு முன்னுள் ஒலிபரப்பு மந்திரியினல் அத்திபாரக்ல் போடப்பட்டது. ஆனல் இதுவரை அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. இத் திட்டத்தை அமுல் நடத்த விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்'.

ஒலிபரப்பு கமிஷன்முன்னிலையில் சாட்சியமளித்த யாழ்ப்பாணம் மேயர் திரு. ரி எஸ் துரைராஜா மேற்கண்டவாறு கூறினர்: திரு வி சி ஜெயசூரியா தலைமையிலான இக் கமிஷனில், செல்வி எல்வின் பெர்ணண்டோவும் திரு எம் ஏ டீ. சில்வாவும் அங்கம் வகித்தனர்.

மேயர் துரைராஜா மேலும் கூறியதாவது: 1965-ம் ஆண்டலவில் பண்ணை பகுதியில் ஒரு கட்டடம் நிறுவ திட்டமிடப்பட்டதோடு, இதற்காக ஒரு காணியும் பெறப்பட்டது. இதுகூட செயல் படுத்தப் படவில்லை.

தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்க தலைவர் திரு சி எம் எஸ் நாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சிங்களம், தமிழ், முஸ்லீம் நிகழ்ச்சிகள் யாவும் ஒரு அலையில் இடையிடையே ஒலிபரப்பப்பட வேண்டும். அப் பொழுது தான் தமிழ் நிகழ்ச்சிகள் தெளிவாக கேட்கும். தனி அலைகள் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் கொடுக்கும்போதும் சிங்கள நிகழ்ச்சி மட்டும் தெளிவாக கேட்கிறது. தமிழ் நிகழ்ச்சியும் கேட்க வசதிசெய்ய வேண்டும்

(குவிம)

## புதிய பங்குக் குரவர்

பருத்தித்துறை, ஞாயிறு

கரவெட்டிப் பகுதிப் பங்குக் குரவர் வேறிடத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து, ஒரு புதிய பங்குக் குரவரைத் தற்காலிகமாக நியமித்துள்ளதாக யாழ்ப்பாணம் மேற்றிராணியார் வண ஜே எமிலியாலுஸ் பிள்ளை கரவெட்டி கத்தோலிக்க வாலிபர் சங்கச் செயலாளர் திரு அ சு யோகராசாவுக்கு அறிவித்துள்ளார். வண வில்லவரசிங்கம் சுவாமியார் பங்குக் குரவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அம்பாறை மாவட்டத்திற்கு மேலும் எட்டு கிராம சேவகர்கள்

சாய்ந்தமருது, ஞாயிறு

அம்பாறை மாவட்டத்தில் மேலும் 8கிராமசேவையாளர்கள் நியமனம் செய்யப்படவிருக்கிருர்கள் இம் மாத இறுதியில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஆர். பிரட்மண் வீரக்கோன் இவர்களைத் தெரிவு செய்வார்.

அம்பாறை மாவட்டத்தில் 75 கிராம சேவையாளர் பிரிவுகள் இருந்தன. சமீபத்தில் இம்மாவட்டம் 83 பிரிவுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது புதிய 8பிரிவுகளுக்குமான கிராமசேவையாளர்கள் டிசம்பர் மாதம் நியமனம் செய்யப்படவிருக்கிருர்கள் இந்நியமனம் பற்றி அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

முசலி, ஞாயிறு

மன்னர் கச்சேரியைச் சேர்ந்த மாந்தை காரியாதிகாரிதலைமை இலிகிதர் திரு. கே. கனகசபாபதி அடுத்த வருடம் ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் முல்லைத்தீவுக் காரியாதிகாரி பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 250 பேர் சேர்த்துக்கொள்வர்

சாய்ந்தமருது, ஞாயிறு

கிழக்கிலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ள அட்டாளைசேனை முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிக்கு அடுத்த ஆண்டிலிருந்து சுமார் 250 புதிய ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் எனத் தெரிய வருகிறது.

## 50 றேடியோக்கள் கைப்பற்றப்பட்டன

கோட்டை, ஞாயிறு

40,000 ரூபா பெறுமதியான றேடியோ பெட்டிகளை வியாழக்கிழமையன்று இரவு கொழும்புத்துறைமுகத்தில் சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்த றேடியோக்கள் கப்பலின் என்ஜினுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org